5-2-1986
PERIODICALS DIVISION

விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 | தை 19 | ஜ, அவ் 21 | இதழ் 355
யாழ்ப்பாணம் | சனிக்கிழமை | 1-2-1986

## "அரசியல்தீர்வு பேசி ராணுவநடவடிக்கை

### தமிழகத்தில் ராஜீவ் கவலை

[சென்னை]

"இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் கடந்த சிலவாரங்களாக பெருமளவில் படுகொலை செய்யப்பட்டுவருகிறார்கள். இக்கொலைகளை தடுத்துநிறுத்த அந்நாட்டுஅரசை வற்புறுத்த வேண்டியது அவசியமாகும்" என்று திருச்சி விமான நிலயத்தில் நேற்று நிருபர்கள் மத்தியில் பேசுகையில் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி காந்தி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:

இலங்கை இனப்பிரச்னைக்கு இராணுவ ரீதியில் தீர்வுகாண இயலாது. அதேவேளை இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தன அரசியல் தீர்வுக்கு பேசிக்கொண்டு இராணுவ நடவடிக்கைகளை வற்புத்தி வருகிறார். பாகிஸ்தான் அரசும் இலங்கை அரசுக்கு சாதகமாக இருந்துவரு

[5ம் பக்கம் பார்க்க]

## ★★★ 94,000 'நாடற்றவர்'கள் பிரச்னை

# சட்டமூலம் நிறைவேறியது!

# சுதந்திரக்கட்சி வெளிநடப்பு!

(பி ராஜரட்ணம்)

**நாடற்றவர்களாகக் கருதப்பட்ட 94,000 இந்திய வம்சாவளியினருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்குவது சம்பந்தப்பட்ட சட்டமூலம் நேற்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.**

**2-வது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நடைபெற்றபோது 130 அங்கத்தவர்கள் ஆதரவாகவும், 9 பேர் எதிராகவும் வாக்களித்தார்கள்.**

**மூன்றுவது வாசிப்பு மீதான அங்கீகாரம் 129 வாக்குகளால் நிறைவேறியது.**

அரசாங்கதரப்பில் களனித் தொகுதி எம். பி. திரு சிறில்மத்யூ இச்சட்டமூலத்திற்கு எதிராகவும்; கம்யூனிஸ்கட்சி அங்கத்தவர் திரு சரத்முத்தெட்டுவகம ஆதரவாகவும் வாக்களித்தனர். சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர் சட்டமூலத்திற்கு எதிராக வாக்களித்தனர்

(5ம் பக்கம் பார்க்க)

## நேற்று வெளிவந்த 'றெக்கட் லோஞ்சர்'

[யாழ்ப்பாணம்]

யாழ் கோட்டைப்பகுதியிலிருந்து நேற்று மாலை 6-30மணியளவில் வந்த 'றெக்கட் லோஞ்சர்' குண்டு, சுமார் ஒரு மைல் தூரத்திலுள்ள வீடு ஒன்றுடன் மோதிவெடித்ததால், அவ்வீட்டின் ஒருபகுதி சேதமடைந்துள்ளது.

வீட்டுக்குள்ளிருந்தவர்கள் மற்றொரு அறையில் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்ததால் தெய்வாதீனமாக உயிர்தப்பினர்.

பலாலி வீதியின் 2ம் ஒழுங்கையிலுள்ள சந்தைய சாமி என்பவரின் வீட்டு ஜன்னலில் மோதியகுண்டு வெடித்ததால் வீடு சேதமடைந்தது.

ஒருவித ஒலியுடன் ஒலி பரப்பிக்கொண்டு சென்ற 'றெக்கற் லோஞ்'சரைக்கண்ட யாழ். நகரமக்கள் கிலிகொண்டு

(5-ம் பக்கம் பார்க்க)

## அத்தியாவசிய சேவைகளாக பிரகடனம்!

[கொழும்பு]

சுகாதாரஅமைச்சு, போதனா வைத்தியசாலைகள் அமைச்சு ஆகியவற்றின் சேவைகளை நேற்று நள்ளிரவுமுதல் அரசு அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனம்செய்துள்ளது.

அவசரகால சட்டவிதிகளின்படி ஆஸ்பத்திரிகள், மருந்தகங்கள், சுகாதார அமைச்சின் கீழுள்ள ஏனைய நிறுவனங்கள் ஸ்ரீஜெயவர்த்தனபுர ஆஸ்பத்தரி உட்பட போதனா வைத்தியசாலைகள். ஆயுள்வேத அமைப்பின் கீழுள்ள நிறுவ

(5-ம் பக்கம் பார்க்க)

## லலித்துடன் இன்று முக்கிய சந்திப்பு

(கா. யோகநாதன்)

பாதுகாப்பு அமைச்சில் இன்று பிற்பகல் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலியை யாழ். நகரில் பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட கோட்டையைச்சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள கல்லூரிகளின் அதிபர்கள், அரசாங்க இலாகா தலைவர்கள் சந்திப்பார்கள்.

யாழ். கோட்டை இராணுவ முகாமிலிருந்து 1000 மீற்றர் பாதுகாப்பு வலயத்தை வாபஸ்பெறுமாறு இவர்கள் அமைச்சரிடம் கேட்டுக்கொள்வார்கள்.

இம்மாநாட்டில் கலந்துகொள்வதற்காக நேற்று நண்பகல் 'இன்ரசிற்றி' மூலம் யாழ் அரசாங்க அதிபர் திரு.

(5-ம் பக்கம் பார்க்க)

## வட்டக்கச்சியில் தொடர் 'முழக்க'ங்கள்!

[நமது கிளிநொச்சி நிருபர்]

வட்டக்கச்சி, இராமநாதபுரம் பகுதிக்கு சுமார் 10 கவசவாகனங்களில் சென்று ஒரு இடத்தில் நிலைகொண்ட இராணுவத்தினர், அந்த இடத்தைவிட்டு வெளியேறுதபடி போராளிகள் எதிர்த்தாக்குதல் நடத்திக்கொண்டிப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

வட்டக்கச்சிக்கு நேற்றுமுன்தினம் சென்ற இராணுவத்தினர், இருநாளாகியும் கிளிநொச்சி திரும்பமுடியாதுள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

அப்பகுதியில் இடைவிடாது குண்டுச்சத்தங்கள் கேட்கின்றன. இச்சம்பவத்தில் பலர் மரணமாகி இருக்கலாம் அல்

(5-ம் பக்கம் பார்க்க)

## "இந்தியாவின் சிறந்த உதவி முகாம்களை மூடிவிடுவதே!" -ஜனாதிபதி

[ரயிட்டர்]

தென்னிந்தியாவில், தமிழ்நாட்டில் இயங்கிவரும் இலங்கைத் தீவிரவாதிகளின் முகாம்களை உடனடியாக மூடிவிடுமாறு இலங்கை ஜனாதிபதி திரு. ஜே ஆர் ஜெயவர்த்தன இந்திய அரசைக் கேட்டுள்ளார்.

"இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் நேற்று வெளிவந்துள்ள பேட்டியொன்றில்மேற்கண்டவாறு ஜனாதிபதி தெரிவித்துள்ளார்

அப்பேட்டியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

'.தனிநாடுகோரிப் போராடும் தீவிரவாதிகளுக்கும்- இலங்கை அரசாங்கத்திற்குமிடையேயுள்ள பிரச்னைகளுக்குத் தீர்வுகாணும் முகமாக, இந்தியா செய்யத்தக்க உதவி இந்தியாவிலுள்ள இலங்கையரனைவரையும் திருப்பி அனுப்பிவைப்பதுதான் தீவிரவாதிகள் இந்தியமண்ணைத் தாயகமாகப்பாவிப்பதை நிறுத்திவிட விடவேண்டும். இந்திய அரசு அங்கு தீவிரவாதிகளின்முகாம்

[8-ம் பக்கம் பார்க்க]

## மூதூர் நிலைமை இது: ஹெலிகொப்டர் சேதம்!

(மூதூர்)

மூதூர் சட்டைபறிச்சான் பகுதியில் இராணுவ முகாம் ஒன்று புதிதாக அமைக்கப்பட்ளது அத்துடன் மூதூர் துறைமுகத்தில் கடற்படையினரின் படகுகள் தயார்நிலையில வைக்கப்பட்டுள்ளன.

மூதூர் பகுதியில் அடுத்த இரு தினங்களுக்கு கடற்றொழிலாளர்கள் கடலுக்குச்செல்ல வேண்டாமென்று மூதூர் பொலிசார்அறிவித்துள்ளனர்.

[5-ம் பக்கம் பார்க்க]

## முல்லைத்தீவு இரு அதிகாரிகள் கடத்தப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு செயலக மேலதிக அரசாங்க அதிபர் திரு. தேவசிகாமணியும் கணக்காளர் திரு சவுந்தரலிங்கமும் கடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்விரு உத்தியோகத்தரின் நிலைமை குறித்து இச்செய்தி அச்சுக்குப்போகும்வரை தெரிவிக்கப்படவில்லை. (மா)

## அமிர்-ராஜீவ் சந்திப்பு

(சென்னை)

தமிழர் விடுதலைக்கூட்டணி செயலாளர் நாயகம் திரு அ. அமிர்தலிங்கம் நேற்று சென்னையிலிருந்து இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தியுடன் புதுடில்லி சென்றுள்ளார்.

திருச்சி விமான நிலையத்தில் திரு. ராஜீவ்காந்தியைச் சந்தித்து பேசிய திரு. அமிர்தலிங்கம் பேச்சுவார்த்தைமூலம் இலங்கை இனப்பிரச்னைக்கு தீர்வுகாண பிரதமர் ராஜீவ் காந்தி எடுத்துவரும் முயற்சிகளை பாராட்டினார்.

[5

## தொண்டமனாறு சம்பவம்

(யாழ்ப்பாணம்)

தொண்டமனாறு முகாமிலிருந்து வந்து கொண்டிருந்த இராணுவத்தினரும் போராளிகளும் நேற்று சில மணிநேரம் எதிர்கொண்டதைத் தொடர்ந்து நேருக்கு நேர் கடுமையக மோதிக்கொண்டனர்

தொண்டமனாறு செல்வச்சந்நிதி கோவிலுக்கு அண்மையிலுள்ள பிரதான பாலத்தருகே இந்த நேரடி மோதல் இடம்பெற்றது.

இப்பகுதியில் கைக்குண்டு

[5ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச் ஜளம்பரம்

## விற்பனைக்கு

Lister Generator 10 K. W. and Lister Engine H. P. 7.2 R P.M. 1500 இரண்டும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: 440, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி; 23724. (C 472)

---

1½ மாத, பூச்சி அகற்றப்பட்டதும் பாலூட்டல் மறப்பித்ததும், தடுப்பூசி போடப்பட்டதுமான தூய இன அல்சேஷன் நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்குண்டு 107, கலைமகள் வீதி, கல்வியங்காடு. (C 471)

---

நெல்லை க. பேரனின் முதற்பரிசுபெற்ற ''விமானங்கள் மீண்டும் வருக'' குறுநாவல் இப்போது யாழ்ப்பாணத்தில் சகல புத்தகக் கடைகளிலும் விற்பனையாகிறது. பிரதி ரூ. 9-50 சதம் மட்டும். (C 459)

---

பண்டத்தரிப்பு சந்தைக்குச் சமீபமாகச் சகல வசதிகளும் உடைய புதிய வீடும் 6½ பரப்பு வளவும் உடன் விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும்: கு. நம்பிராசா, வர்த்தகர், பண்டத்தரிப்பு. C 478

---

கலர் என்லாச்சர் Durst M. 370 ரைமர் T. M. 60, அனலைசர் C 300, டெவலப்பிங்ராங் போன்ற பல புதிய பொருட்கள் உடன் விற்பனைக்குண்டு விளம்பர இல. C 468, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [C 468]

---

பனைகள் நிறைந்த பிரயோசனம் பெறக்கூடிய பத்துப் பரப்புப் பனங்காணி திக்கம் கடற்கரை சந்தியிலிருந்து கால்மைல் தொலைவில் உள்ளது. பூபாலரட்ணம், ரஞ்சனு தியேட்டர்அருகாமை, மே/பா கணேசர் செல்லம்மா, வல்வெட்டி. [C 475]

---

வீட்டுத்தளபாடங்கள், கட்டில்கள், மேசைகள், அலுமாரிகள், பிறெசர் குக்கர், றெடிமேற் சட்டைகள், துணி வகைகள், இத்தாலியன் பெரிய கம்பளங்கள், றெக்கோட் பிளேயர், யப்பான் டினர்செற், ஸாப் கல்குலேற்றர், செவிப்புலன் கருவி, சிங்கர் தையல் மெஷின், புலோ பொலிசர் [கூவர்], இன்னும் பல. சி. பத்மநாதன், C/o P. அம்பலவாணர், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலிவடக்கு. திருநெல்வேலிச் சந்திக்கும் மருத்துவக் கல்லூரிக்குமிடையில். [C 473]

---

கல்வளை, சண்டிலிப்பாயில் குடியிருப்பதற்குகந்த 12 பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய விலாசம்: S. செந்தில்நாதன், தர்மா விவசாயக் களஞ்சியம், மருதனுமடம் சந்தி, மருதனுமடம். [C476]

---

10 அடி நீளமும் 8 அடி உயரமுமுடைய பாவித்த இரண்டு பெரிய கண்ணாடி அலுமாரிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: S. துரைசிங்கம்; கலாசாலை வீதி, திருநெல்வேலி வடக்கு, திருநெல்வேலி. (C 436)

## தேவை

இளைப்பாறிய தச்சு வேலை ஆசிரியர் தேவை. விண்ணப்பிக்கவும், விளம்பர இல: C442 C/O ஈழநாடு, யாழ்ப்பாணம். (C- 442)

---

சாவகச்சேரியில் உள்ள பிரபல்யமான ஆலயத்திற்கு மண்டபம், மடப்பள்ளி வேலைகள் தெரிந்த உதவி பூசகர் தேவை. தொடர்பு: விளம்பர இல. C 425, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (C 425)

## வகுப்புகள்

National Certificate Course in English (1 year) Elementary Certificate Course in English [6 months], G C E. (O/L) English Language Course (1 year) விரைவில் ஆரம்பமாக உள்ளன. தகைமையுடைய விரிவுரையாளர்கள் வகுப்புகளை நடாத்துவர். 10-02-86க்கு முன் நேரில்வந்து தொடர்பு கொள்ளவும். அதிபர், உயர் கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (C 423)

---

3 வருட மருத்துவ தாதிகள் டிப்ளோமா பயிற்சி (Nurses Training Diploma) ஆங்கில மொழிமூலம் 15-02-86 ஆரம்பமாக உள்ளது. Recognised University Certificate will be issued. 10-02-86க்கு முன் நேரில் வந்து தொடர்புகொள்ளவும். அதிபர், உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (C 422)

---

G. S. Q. (Bio) [Botany, Zoology, Chemistry] Home science Diploma [மனையியல் டிப்ளோமா] நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. G S.Q. (Maths) [Pure, Applied, Statistics, Chemistry, Physics], Montessori Diploma Teachers Training (பாலர் பயிற்சி) விரைவில் ஆரம்பமாக உள்ளது. நேரில் வந்து தொடர்பு கொள்ளவும்: அதிபர், உயர் கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (C 421)

---

VI தொடக்கம் A/L வரை கணிதம், தமிழ், விஞ்ஞானம் கற்பிக்கப்படும். திருமதி யதீனி பத்மநாதன் B.Sc. C/o P. அம்பலவாணர், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு. [C 474]

---

E. C. E.-I (London) 87' 15-02-1986 ஆரம்பமாகின்றன. E. C. E.-II (London) 86/87, Draughtsmanship, Quantity Surveying [City and Guilds] நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. நேரில் வந்து தொடர்புகொள்ளவும்: அதிபர், உயர் கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். [A458]

## சோதிடம்

புதுவருட பன்னிருராசிகளின் பலன்களும் குருமாற்றமும் விலை 3/- எங்கும் கிடைக்கும். ஆத்மசோதி நூலாசிரியர் த. சத்தியதாஸன், கமலா வாச்வேக்ஸ், மெயின் வீதி, காங்கேசன்துறை. (C 4[illegible])

## புதிய நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் பத்திரகாளி கோவிலடி அம்பாள் சன சமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் திரு. ம. நடராசா தலைமையில் கடந்த புதன் கிழமை சிறப்பாக நடைபெற்றது.

பத்திரகாளி கோவில் முன்றலில் நடைபெற்ற இக் கூட்டத்தில் புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். போஷகர் திரு. ம. நடராசா, (பெரிய ஐயா), தலைவர் சு. குணரட்ணம், செயலாளர் இ. பாலமுரளி, இணைச்செயலாளர் க. புலேந்திரன், பொருளாளர் க. மகேந்திரகுமார், இணைப்பொருளாளர் செ பிரபாகரன். அத்துடன் ம. விஜயரட்ணம், செ. பாலச்சந்திரன் உட்பட அறுவர் கொண்ட செயற்குழு வொன்றும் தெரிவாகியது.

அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் மாத சாந்தாவாக ரூபா பத்து செலுத்த வேண்டும் என்பது உட்பட பல்வேறு தீர்மானங்கள் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன. [ச]

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

மல்லாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற வீரசிங்கம் நவரட்ணத்தின் மரண சாதனமில்லாத சொத்துக்கள் தொடர்பான விடயத்தில்.

மரணமெய்தியவர்

இல. தத்துவம் | 258

வீரசிங்கம் நவரட்ணம் கைம்பெண் இராஜேஸ்வரி ''யமுனு கிரி'' நரியிட்டான், மல்லாகம் எதிராக மனுதார்.

1. நவரட்ணம் மகள் யமுனு
2. நவரட்ணம் ஜெயரட்ண சிங்கம்
3. நவரட்ணம் மகள் கல்பனு

மூவரும் பராயமடையாதவர்கள். நரியிட்டான் மல்லாகம்.

4. தம்பையா திருஞான சம்பந்தர் ஏழாலை மத்தி, ஏழாலை (பராயமடையாதவர்களின் வழக்குப் பாதுகாவலராக 4-ம் எதிர் மனுதார்)

எதிர்மனுதார்கள்.

மேலேயுள்ள இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரண சாதனமில்லாச் சொத்துக்களை நிர்வகிப்பதற்கு மேற்படி நீதிமன்றில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986 ஆம் ஆண்டு மாசி மாதம் 05 ஆம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இம்மன்றில் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன கட்டளையாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1985 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 13 ஆம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி
ஆழ்வார் சிவபாதசுந்தரம்
பதிவாளர்.

வரைவு:
அரியநாயகம்.
மனுதாரின் சட்டத்தரணி.
(C454)

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## ஹென்றி பெரேரா மீண்டும் கைது!

(கொழும்பு)

நீர்கொழும்பு சிறையிலிருந்து அண்மையில் தப்பியோடிய உடுவரகே ஹென்றி பெரேரா அல்லது 'விஸ்வன்' எஹிலிய கொடையில் நேற்று மீண்டும் கைதுசெய்யப்பட்டுள்ளார் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ்க் கைதுசெய்யப் [7ம் பக்கம் பார்க்க]

## தேவை

பிரசுரத் தொழில் ஆரம்பிக்க விருக்கும் நிறுவனத்திற்கு பங்காளர்கள் தேவை. முதலீடு செய்யக் கூடிய இருபாலரும் விண்ணப்பிக்கலாம் வேலை வாய்ப்புக்கள் உள்ளன. கலை, இலக்கிய எழுத்துத் துறையில் ஆர்வமுள்ளவர்கள் பொறுப்பான பதவிகளில் கடமையாற்ற அரிய சந்தர்ப்பம் 15 - 02 - 86க்கு முன் விண்ணப்பிக்கவும். சகல விபரங்களுக்கும்:

முகாமையாளர்,
''தங்கஸ்தான்'', சுன்னுகம்.
[C 477]

---

**GANAS** அரசடி றோட், தட்டாதெரு.

A/L 88 ஆரம்பம்: 1-2-86

A/L 86 வினு/விடை வகுப்புக்கள் ஆரம்பம்: 1-2-86

A/L 87 ''வெப்பவியல்'' ஆரம்பம்: 1-2-86 திரு. மணியம்

(A 167)

## திருமண அழைப்பு

திரு. திருமதி சிவரத்தினம்
(உரும்பிராய்
தம்பதிகளின் மகன்
திருநிறை செல்வன்
''கதிர்காமநாதன்''
திரு. திருமதி தர்மலிங்கம்
(95, கோவில் வீதி, நல்லூர்)
தம்பதிகளின் மகள்
திருநிறை செல்வி
''காயத்திரிதேவி''
நிகழும் (1-2-86)ல் விம்பிள்டன் (இங்கிலாந்து)
ஸ்ரீ கணபதி ஆலயத்தில்
திருமணம் செய்துகொள்கிறுர்கள்
என்பதை மகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

தகவல்:
க. தர்மலிங்கம். (C464)

## அறிவித்தல்

**யாழ் உணவு ஆலை, திருநெல்வேலி.**

எமது தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் கோழித்தீன் உணவுகளின் விலைகள் **1-2-86-ம் திகதி தொடக்கம் குறைக்கப்பட்டுள்ளன** என்பதை மகிழ்ச்சியுடன் எமது சகல முகவர்களுக்கும், பாவனையாளர்களுக்கும் அறிவித்துக்கொள்ளுகின்றோம்.

| விபரம் | பழைய விலை ரூ. ச. | புதிய விலை ரூ. ச. |
|---|---|---|
| முட்டையிடும் கோழி உணவு (25 கி. கி) | 145 - 00 | 135 - 00 |
| வளரும் குஞ்சு உணவு (25 கி. கி) | 145 - 00 | 135 - 00 |
| குஞ்சு உணவு (25 கி. கி) | 165 - 00 | 160 - 00 |
| இறைச்சிக்கோழி உணவு (25 கி. கி) | 165 - 00 | 160 - 00 |

தொடர்ந்தும் ஒரு தொன்னுக்கு மேலதிகமாகக் கொள்வனவு செய்பவர்களுக்கு **5% கழிவு வழங்கப்படும்.**

பொதுமுகாமையாளர்,
யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.
(A 171)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெரூஸலம் பள்ளிவாசல் விவகாரம்:

# இஸ்ரேலுக்கு அமெரிக்கா ஆதரவு

(நியூயோர்க்)

ஜெரூஸலத்தின் பள்ளிவாசல் ஒன்றில் இஸ்ரேலியர்கள் அத்துமீறியதைக் கண்டித்து ஐ.நா வில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை அமெரிக்கா செயலிழக்கச் (வீட்டோ) செய்துள்ளது. அண்மையில் முஸ்லிம்களின் புனித நகரமான ஜெரூஸலத்தில் உள்ள அல் அக்ஸா பள்ளிவாசலுக்கு இஸ்ரேலிய பாராளு மன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் விஜயம் செய்த போது அங்கு தொழுகையில் ஈடுபட்டிருந்த முஸ்லீம்களுடன் வாக்குவாதப் பட்டுள்ளனர்

இதனை எதிர்த்தே ஐ.நா.சபையின் பாதுகாப்புச் சபையில் தீர்பானம் கொண்டுவரப் பட்டது. இதனை மத்திய கிழக்கு நடுகள் மட்டுமன்றி ஏனைய இஸ்லாமிய நாடுகளும் ஆதரித்தன.

பலத்த தனிப்பட்ட பேச்சுக்களின் பின்னர் இங்கிலாந்தும் பிரான்சும் இத் தீர்மானத்தை ஆதரிப்பதாக உறுதியளித்தன.

ஆயினும் இறுதி நேரத்தில் அமெரிக்கா தனக்குள்ள 'வீட்டோ' அதிகாரத்தைப் பாவித்து இதனை செயலிழக்கச் செய்தது. சபையில் பேசிய திருமதி டத்ரீஷியா பேர்க், அமெரிக்கா முஸ்லீம் மக்களின் உணர்ச்சிகளை புரிந்து கொள்கிறது ஆயினும் இத் தீர்மானத்திலை நன்மையேதும் விளையப் போவதில்லை என்றார். (செ)

## முத்திரை தட்டுப்பாடு

(சுண்டுக்குளி)

யாழ் தபாலகத்தில் 10ரூபா, 25 சதம், 15 சதம் பெறுமதியுடைய முத்திரைகளே பாவனைக்கு உள்ளன.

இவை தவிர்ந்த ஏனைய முத்திரைகள் பாவனைக்கு இல்லாததால் பதிவுத் தபால், வெளிநாட்டுத் தபால் முதலியவற்றை அனுப்பச் செல்பவர்கள் ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர் இதே வேளையில்மற்றும் உப தபாலகங்களிலும் முத்திரைக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது.

கிளிநொச்சி சம்பவம்:

# "12 இராணுவவீரர்கள் ரயில் நிலையம்வந்து சுட்டார்கள்"

## மரணவிசாரணையில் தகவல்

[யாழ்ப்பாணம்]

"கிளிநொச்சி ரயில் நிலையத்தில் இராணுவத்தினர் சுட்டுக்கொண்டிருந்தபோது தாடிவளர்த்த ஒரு இராணுவ வீரர் வந்து, 'உங்கள் எல்லாரையும் சுட்டுத்தள்ளுவோம்' என்று சிங்களத்தில் கூறினர். அதன்பின் சுட்டார்கள். அப்போது என்மனைவி காயமடைந்து, பின் மரணமானர்."

வட்டக்கச்சியைச் சேர்ந்த ஆசிரியை ந. நாகேஸ்வரியின் [வயது 36] மரணவிசாரணையில் சாட்சியமளித்த அவரது கணவன் நல்லையா மேற்கண்டவாறு கூறினர்.

யாழ். பதில் நீதவான் க. கேசவன் மரணவிசாரணை நடத்தினர். சி. நால்லையா மேலும் கூறியதாவது;

"சம்பவதினம் நானும், மனைவியும், இரு பிள்ளைகளும் காலை 10 மணிக்கு ரயில் நிலையம் சென்றோம். அங்கு வேறு 40 பிரயாணிகள் நின்றனர். நண்பகல் 1-45 மணிக்கு அருகிலுள்ளமுகாமில் இரண்டு வெடிச்சத்தம் கேட்டது. அங்கு மேலேநின்று இராணுவத்தினர் சுட்டுக்கொண்டிருந்தனர். இரண்டு பீரங்கி கவச வாகனங்கள் சுட்டபடி திருநகர் நோக்கிச் சென்றன. 10 அல்லது 12 இராணுவவீரர்கள் ரயில் நிலையம் நோக்கி வந்து துப்பாக்கியால் சுட்டனர். பயணிகளை சுடமாட்டார்கள் என்று ரயில்நிலைய அதிபர் கூறினர்.

ஆனல் எங்களைநோக்கிச் சுட்டனர். உடனே கைகளை உயர்த்திக்கும்பிட்டு மன்றாடி "ஐயோ சுடாதீர்கள்" என்று கெஞ்சினேம்; தாடிவளர்த்த இராணுவ வீரர் வந்து "சுட்டுத் தள்ளுவோம்" என்று கூறினர். அவர்கள் சுட்டபோது எனக்கு காயமேற்பட்டது. மனைவிக்கும் காயமேற்பட்டது. மகன் இறந்துவிட்டார். இராணுவத்தினர் முகாமிற்கு சென்றுவிட்டு திரும்பிவந்தனர். அந்த தாடிவளர்த்த வரும் திரும்பிவந்தார். அவரிடம் வேதனை தாங்கமுடியவில்லை, சுட்டுக்கொல்லுங்கள் என்றேன். அவர் 'நாங்கள் சுடவில்லை, தீவிரவாத புலிகள்

[7ம் பக்கம் பார்க்க]

# 'சலஞ்சரின்' முக்கிய பாகம் கண்டு பிடிப்பு!

(வாஷிங்டன்)

நடுவானில் வெடித்துச் சிதறிய 'சலஞ்ச'ரின் முக்கியபாகமொன்று புளோரிடா கடல் பிரதேசத்தில் கண்டெடுக்கப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கென்னடி விமான நிலையத்திலிருந்து சுமார் 50 மைல் தொலைவில் உள்ள கடற்கரைக்கு அடித்து வரப்பட்ட மனித எலும்புகளும்திசுக்களும் இவ் வோடத்தில் பயணம் செய்த ஒருவரினுடையதா என்று அறிய மருத்துவப் பரிசோதனைகள் நடைபெறுகின்றன.

கடந்த செவ்வாய்க் கிழமை அமெரிக்க விண்வெளி ஓடமான 'சலஞ்சர்' புறப்பட்டு 75 நொடிகளில் வெடித்து அதில் பயணம் செய்த எழுவரும் மரணமானது தெரிந்ததே.

எதனுல் விபத்து நேர்ந்தது என்பதற்கான விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. கிடைக்கும் ஒவ்வொரு தடயமும் மிக நுணுக்கமாக ஆராயப்படும் என சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்தனர். இதுவரை சுமார் 200 கிலோ எடையுள்ள பொருட்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளன. இவற்றுள் ஒரு துண்டு 'சலஞ்சர்' கலத்தின கட்டுப்பாட்டுப் பகுதியின் ஒரு பாகம் என்று அறவிக்கப்பட்டுள்ளது.

'சலஞ்சர்' விபத்தின் பின்னர் அமெரிக்க ஜனதிபதி றேகனும், அவரது பாதுகாப்பு அமைச்சர் கஸ்பர் வெய்ன் பேகரும் முரண்பாடான கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஜனதிபதி றேகன் சாலஞ்சரின் விபத்து,விண் வெளியை வெற்றி கொள்ளும் அமெரிக்காவின் திட்டத்தை காமதிக்கச் செய்யாது எனத் தெரிவித்துள்ளார்

திரு.வெய்ன் பேகர் இவ்விடத்து அமெரிக்காவின் அணு ஆயுத ஏவுகணை எதிர்ப்புத் திட்டத்தைப் பின் போடச் செய்துள்ளது எனக் கூறினர்.

இதனிடையே 'சலஞ்ச'ரில் மரணமாவர்களுக்கு அனுதாபங்களைத் தெரிவிப்பதில் முன்னணியில் நின்ற சோவியத் யூனியன் இவ் விபத்திலின்றும் சில அரசியல் லாபங்களை தேடுவதில் முனைந்துள்ளது.

சோவியத் செய்திஸ்தாபனமாகிய 'டாஸ்', அறிக்கையொன்றில்;

"இவ் விபத்து விண் வெளி அமைதி நோக்குகளுக்கா மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டுமென்பதையே குறிக்கிறது." என்று கூறியுள்ளது சோவியத் யூனியன் இந்த விண் வெளி ஓடங்கள் இராணுவ பயன்பாடுகளுக்கும் உபயோகப்படுத்தட்டு வந்ததை பல முறை கண்டனம் செய்துள்ளதுகுறிப்பிடத்தக்கது. (செ)

# "கல்வி வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது"

## ஜனதிபதிக்கு மகஜர்

[யாழ்ப்பாணம்]

"1000 மீற்றர் பாதுகாப்பு வலயத்தினல் உருவான பாதுகாப்பின்மையால், மாணவிகளுக்கு மன அமைதியின்மை ஏற்பட்டுள்ளதுடன் அவர்களின் கல்வியும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது."

ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு யாழ் வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளின் பெற்றோர் அனுப்பியுள்ள மகஜரில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்மஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது; யாழ். வேம்படி மகளிர் கல்லூரி, கோட்டையிலிருந்து 500 மீற்றர் தூரத்தில் இருக்கிறது. கூடிதலான மாணவிகள், கல்லூரிக்கு சமீபத்திலிருந்து வருகின்றார்கள். இக்கல்லூரி வடக்கிலுள்ள ஓரேஒரு தேசிய மகளிர் பாடசாலையாகும். கணிசமான அளவு மாணவிகள் கல்லூரி விடுதியிலும் தங்கியுள்ளார்கள். கல்லூரி அதிபரின் விடுதியும் இக் கல்லூரி வளவில் அமைந்துள்ளது.

1000 மீற்றர் பாதுகாப்பு வலய பிரகடனத்தை உடனடியாக வாபஸ்பெறுமாறு கேட்டுக் கொள்கிறேம. [க]

## மக்கள் வங்கி இயங்குகிறது

[வவனியா]

வவனியா மக்கள்வங்கி நேற்று முதல் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது;

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு மக்கள் வங்கியில் பாதுகாப்பு சேவையிலீடுபட்டிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் துப்பாக்கிகள் இனந்தெரியாதவர்களால் கொள்ளையடிக்கப்பட்டதையடுத்து பாதுகாப்பின்மை காரணமாக வங்கி கடந்த இருதினங்களாக மூடப்பட்டிருந்தது. வங்கிமேலிடத்திலிருந்து கிடைத்த உத்தரவைத் தொடர்ந்தே வங்கி மீண்டும் நேற்றுக்காலை திறக்கப்பட்டு வங்கி வேலைகள்யாவும் நடைபெற்றன. [ச]

இலங்கையில் முதல் முதலாக

தேசிக்காய் வாசனையுடன்




எம்டீ சோப்




ரூபா 2/- ரூபா 2/-




ரூபா 12/50

இதே விலையில் இதைவிட சிக்கனமாகவும், பாதுகாப்பாகவும், பளிச்சிடும் வெண்மையாகவும் சலவை செய்யக்கூடிய வேறொரு சவர்க்காரம் கிடைக்குமானல்.........

இன்றே வாங்குங்கள்

தேசிக்காய் வாசனையுடன்

புதிய எம்டீ சோப்

இனம்:

(1) 5 எம்டீ சோப் மேலுறைகளுக்கு ஓர் பொக்கற் கலண்டர்.

(2) 30 எம்டீ சோப் மேலுறைகளுக்கு ஓர் அப்பியாசக் கொப்பி.

(A 175)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

தன்னை அறிந்திடும் தத்துவஞானிகள்
முன்னை வினையின் முடிச்சையவிழ்ப்பார்கள்;
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவார்கள்
சென்னியில் வைத்த சிவனருளாலே.

திருமந்திரம்;

# நமது நோக்கு

## "நோய்முதல் நாடி" நிற்கும் அரச வைத்தியர் சங்கம்

பத்திரிகைகளிலும் இருவிதம். இரு சம்பவங்கள் இதனை விளக்குகின்றன.

மது விலக்குப் பற்றி மிகப் பரபரப்பாகப் பேசிய பிரபல பேச்சாளர் ஒருவர் சபையோரின் எதிர்ப்பை உணர்ந்தபோது, பக்கத்திலிருந்த பத்திரிகை நிருபர்களுக்கே மெல்லப் பேசினார்: "உங்கள் செவிகள் எனக்குத் தேவையில்லை; நாளை மூன்று லட்சம் மக்கள் இந்தப் பேச்சைப் படிப்பார்கள்" என்றாராம்.

இன்னொருவிதமான பத்திரிகை இந்த நாட்டில் அபூர்வம்; நகைச்சுவை மன்னன் என்று தம்மை மதித்துக் கொண்டவர், பத்திரிகை ஒன்றுக்குத் தமது சுயசிந்தனையில் எழுந்த "துணுக்குகள் இவை" என்றொரு கோவையை அனுப்பி வைத்தார். சில நாட்களுக்குப் பின் கிடைத்தது காசோலை அல்ல; "ஐயா, உங்கள் பகடிகள் சில முன்னரே படித்திருக்கிறோம். மற்றவையை இன்னும் காணவில்லை" என்பதே பதில்.

மக்களின் பரப்பரப்புணர்வைப் பயன்படுத்தி வெளிக்கிடும் செய்திகளைக் கண்டும் கேட்டும் நிலைகுலையும் மக்கள் என்றும் இருக்கத்தான் செய்யும். வீண் உணர்ச்சியையும், வெறும் பேச்சையும் பரப்புவதற்கென்றே பத்திரிகைகள் பல காத்திருக்கின்றன.

இதனை நாம் உணரமுடியுமானல் பத்திரிகையின் பெரும் பொறுப்பைக் கைவிடாதிருக்கும் கட்டுப்பாடு ஓரளவிற்குக் கைகூடும்.

இலங்கையின் இனப் பிரச்னைபற்றி ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தன அளித்த பேட்டிகள், 'சோ'வுக்கானாலென்ன, 'நாயரு'க்கானாலென்ன, அவற்றைப் பல்லாயிரம்பேர் படிக்கட்டுமென்பதே முக்கிய நோக்கம்.

இனப்பிரச்னையை இன்று இரு கூறுகப் பிரித்துள்ள ஜனாதிபதி, அரசியல் பிரச்னைக்கு அரசியல் தீர்வும், இராணுவப் பிரச்னைக்கு இராணுவத் தீர்வும் என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாகச் சத்திர வைத்திய நிபுணத்துவத்துடன் கூறியிருக்கிறார்.

வைத்திய நிபுணரும், சத்திர சிகிச்சை நிபுணரும் ஒன்றுகூடி ஆலோசனை செய்யவேண்டிய நோய் இது என்பது ஜனாதிபதியின் கூற்றிலேயே தெளிவாகிறது. "இவையிரண்டிலும் ஒன்று மற்றையதை முந்தியோ அல்லது பிந்தியோ தொடர முடியாது. இவை இரண்டும் ஒரே நேரத்தில் வெற்றியடைய வேண்டும்" என்பதே அவருடைய இன்றைய கூற்று.

இதனை அறிந்தோ அறியாமலோ நாட்டின் அரச வைத்தியர் சங்கம் இலவசமாக ஒரு ஆலோசனை கூறியிருக்கிறது; அதனை விளக்க ஒரு மகஜரையும் அனுப்பி வைத்திருக்கிறது.

அரச வைத்தியர் சங்கமென்றாலும், அரசுடன் போராடும் நிலையில் அது இருப்பது வேறு விடயம்; விடயம் வேறென்றாலும் அதுவும் நாட்டின் இதயத்தைத் தொடும் விடயம்.

இருப்பினும் நாம் குறிப்பிடும் மகஜர் விருப்பு வெறுப்பின்றி அவதானிக்கப்படவேண்டிய அவசர விடயம்.

நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பதே மருத்துவரின் கடமை என்று நினைப்பவர்கள் இன்றும் உண்டு.

நாடே நோயுற்ற நிலையில் இருந்தால் அதற்கு பரிகாரம் காண்பவர் அரசியல் வாதிகளும் ராணுவமும் தானா? இல்லை என்பதே இலங்கை அரச வைத்தியர் சங்கத்தின் கருத்து. மக்களை மட்டுமல்ல அரசையும் பாதுகாப்பது அரச வைத்தியர் சங்கத்தின் மருத்துவக் கடமை.

அக்கடமையில், சங்கம் ஏகமனதாய் நோய் முதல் நாடிநிற்பது எங்கள் நேற்றைய பத்திரிகையில் காணப்படும் செய்தியின் இரண்டாவது — கடைசி— பகுதியில் தெரிகிறது.

நோயைக் குறிப்பிடாவிட்டாலும் [செய்தியில்] இந்த நோயின் இன்றைய அபாய குணம் என்ன என்பதைக் சங்கம் குறிப்பிட்டிருக்கிறது.

யாழ், கோட்டையிலிருந்து இராணுவத்தினரை அகற்ற வேண்டும். ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலயத்தை வாபஸ்பெற வேண்டும். இவ்விரண்டும் நோய் வீறடைந்த நிலையில் குறிப்பிடப் பட்டிருப்பது தெளிவு.

ஆயிரம் மீற்றர் பாதுகாப்புவலயம் வந்த பின்னரே யாழ். ஆஸ்பத்திரி டாக்டர்கள் கண்திறந்திருக்கிறார்கள். அதற்காகவே தாய்ச்சங்கம் தொழிற்படுகிறதென்று நினைப்பவர் இந்த நாட்டின் டாக்டர்கள் இத்தகைய சுயநலவாதிகளென்று கருதுபவர்களே.

டாக்டர்கள் தாங்கள் பாதுகாப்பாக இருந்தால் போதுமென்று நினைத்தால் மருத்துவ சேவையின் அர்த்தம் என்ன?

அரசியல் தலைவர்கள் பாட்டியின் கதைகள் சொல்லி நாட்டைப் பரிபாலிக்க முடியுமென்றால் நாட்டின் கதி என்ன.

யாழ்ப்பாணத்தின் உயிரைத் தாக்கிவரும் வலயம் இனப்பிரச்சனையென்ற நோயின் அறிகுறி, பயங்கர அறிகுறி. வலயம் எடுத்தாற்போதாது, இனப் பிரச்னைக்கு உடனடி அரசியல் தீர்வு — ராணுவதீர்வல்ல என்ற முடிவை வைத்திய நிபுணர்கள் வழங்கியிருக்கின்றனர்.

சுருங்கச் சொல்லில், 'போரை நிறுத்துங்கள்: அரசியல் தீர்வைக் காணுங்கள்' என்ற மகாவாக்கியம் மகத்தான இடத்திலிருந்து பிறந்திருக்கிறது.

# தமிழ் நாட்டிலுள்ள இலங்கை அகதிகளுக்கும் பாப்பரசரின் தரிசனம் கிடைக்கும்!

உலக சமாதானத்தின் காவலனாக, ஏழை மக்களின் தொண்டனாக, யேசுவின் நற்செய்தியைப் பரப்பும் தேவ தூதுவனாக, உலகின் நாற்பது நாடுகளுக்கு நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டுள்ள திருத்தந்தை இரண்டாவது அருளப்பர் சின்னப்பர், இன்று முதல் 10 நாட்களுக்கு இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்கின்றார். இந்த விஜயத்தின் போது அங்கு அகதிகளாகவிருக்கும் ஒரு லட்சத்து 50 ஆயிரம் இலங்கை அகதிகளுக்கு பாப்பரசரின் தரிசனம் கிடைக்கும்.

பாப்பரசரின் விஜயத்துக்கு மரபுமுறை இந்துக்கள் பலமான எதிர்ப்புத் தெரிவித்த போதும், திட்டமிட்டபடி பாப்பரசரின் விஜயம் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளையில், பாப்பரசரின் விஜயத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து வத்திக்கானில் இருந்து, குண்டு துளைக்கமுடியாத காரொன்றும் தமிழ்நாட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் வாழும் பகுதிக்கு முதற் தடவையாக பாப்பரசர் விசேஷமாக விஜயம் மேற்கொள்வது இதுவே முதற் தடவையாகும் அதுவும் ஒரு கோடி இருபது லட்சம் கிறிஸ்தவர்கள் சிறுபான்மையினராக வாழும் தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்கின்றார். பாப்பரசர் தமிழிலேயே உரையாற்றுவார் எனக் கூறப்படுகிறது.

### ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர்

மதமே கூடாதென கொள்கை பரப்பப்பட்ட போலந்து தேசத்தில் வாடோவிச் என்ற சிறிய கிராமத்தில் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர், இராணுவ அதிகாரி ஒய்தியா எமலி தம்பதிகளுக்கு 3வது குழந்தையாகஆயி

[7-ம் பக்கம் பார்க்க]

- ஸச்சி -

## இன்று ஜனனதினம்:

# ஏழைகளுக்காக இரங்கியவர் விவேகானந்தர்

நவீன உலகில் மனிதன் பெரும் பொருள்தேடி தனது உற்றார், உறவினர்களுக்காக அதைச் செலவழித்து பெருமிதம் அடைந்து வருகின்றான். சொற்ப அளவேனும் அவன் மற்ற மனிதனை நினைப்பது இல்லை. இதுபோல்தான் பெரிய செல்வம் கொழிக்கும் நாடுகளின் நிலையும் ஆகும். ஏதோ விதிவசத்தால் ஏழையானவனையும் பின்தங்கிய நாட்டையும் காப்பாற்ற ஒருவரில்லையா? இக் கேள்வியை அன்று சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் நடைபெற்ற சர்வமத சமரச மகாநாட்டில் எழுப்பினார்

ஒரு சந்நியாசி மக்களின் அவலநிலையைப்பார்த்து முதன் முதல் கண்ணீர் சிந்திய பெருமை சுவாமி விவேகானந்தரையே சாரும். சுவாமி விவேகானந்தரின் பல கூற்றுக்கள் இதற்கு சான்று பகர்கின்றன.

"வறுமையிலும் அறியாமையிலும் ஆழ்ந்திருக்கும் கோடிக் கணக்கான ஏழைகளுக்காக யார் அனுதாபம் கொள்கிறார்கள்? எவனுடைய இதயம் ஏழைகளுக்காக இரத்தம் வடிக்கிறதோ அவனையே நான் மகாத்மா என்று சொல்வேன். அந்த ஏழை மக்களுக்காக வருந்துபவர்கள் யார் இருக்கின்றார்கள்? என்கிறார் சுவாமிகள்.

இன்னும் ஒரு சந்தர்ப்பத்தில் சுவாமி விவேகானந்தர் "இந்த ஏழை மக்களையே உங்கள் தெய்வமாகக் கொள்ளுங்கள். அவர்களைப் பற்றியே சிந்தனை செய்யுங்கள்; அவர்களுக்காகவே உழையுங்கள். அவர்களுக்காகவே இடைவிடாமல் பிரார்த்தனை செய்யுங்கள். அப்போது ஆண்டவர் உங்களுக்கு வழிகாட்டுவார்" என்று பகர்ந்துள்ளார்.

சுவாமிகள் வாழ்ந்த காலத்தில் கல்கத்தாவில் பிளேக் என்னும் கொடிய கொள்ளை நோய் பரவலாயிற்று. அநேகம் பேர் இறந்தனர். [illegible] கொள்ளை நோயால் பீடிக்கப்பட்டவர்களது பரிதாபகரமான நிலைமையைக் கண்டு உள்ளம் உருகினர். உடனே சகோதர சீடர்களுடன் நிவாரணவேலை தொடங்கப்பட்டது இச்சேவைக்கு போதிய பணம் இல்லாமையால் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்துக்கென வாங்கிய நிலத்தை விற்க விரும்பினர். அந் நிலத்தை விற்பதற்கு முன்பே போதியபணம் வந்தது. பிளேக் நோயாளியின் அருகில் சுற்றத்தார் தானும் போகஅஞ்சிய இடத்து சுவாமிகள் பக்கத்திலிருந்து சேவை புரிந்தார்.

சுவாமிகளுடன், சில பண்டிதர்கள் வேதாந்த விசயமாக தர்க்கம் பண்ண வந்திருந்தனர். இதைக் கண்ணுற்ற சுவாமிகள் கவலையுற்றார். அத்தருணத்தில் இந்தியாவில் அநேகர் பஞ்சத்தால் இறந்தனர். சுவாமிகள் தாம் ஆற்றிய நிவாரண வேலை போதவில்லை என்று கருதினர். பண்டிதர்கள் தாங்கள்வந்த நோக்கத்தை வெளியிட்டதும், சுவாமிகள் "பெரியோய். அன்னமிலாது மக்கள் அழுகின்ற கூக்குரல் தங்கள் காதில் விழவில்லையா?" என்று கேட்டார். அவ்வாறு கேட்கும் போது சுவாமிகளின் கண்களின் நீர் ததும்பியது. "சிறிதாவது பசியைத் துடைத்து வாரும். அதன்பின் வேதாந்தத்தைப் பற்றி வேண்டியளவு வாதிடலாம்" என்றார்

சுவாமிகள் இப்பூவுலகில் 39 ஆண்டுகள் வாழ்ந்த போதிலும் ஒரு சமுதாய வளர்ச்சிக்கு வேண்டிய யாவற்றையும் திரட்டித் தந்துள்ளார். அவரது இப்புனித ஜன்மதினத்தில் மக்களுக்கு சேவை புரிவோம் என்று உறுதி எடுப்போமாக

"நான் தத்துவஞானி அல்ல; ஆத்மஞானியுமல்ல; நான் ஓர் ஏழை: ஏழைகளை நேசிக்கிலேன். அவ்வளவு தான்"

செல்வி ஜெயகுமாரி முத்துக்குமாரு

# மக்கள் கருத்து

## அ.இ.காந்தி சேவா சங்கக்கூட்டம்

22-1-86 ல் வெளியான திங்கள் பத்திரிகையில் மக்கள் கருத்து பகுதியில் அகில இலங்கை காந்தி சேவா சங்க ஆண்டுக் கூட்டம் என்ற தலைப்பில் வந்த கடிதத்தைப் பார்த்ததும் தப்பெண்ணங்களைபோக்க பதில் எழுத வேண்டும் என்ற எண்ணம் உண்டானது. தயவு செய்து வெளியிட்டு உதவுங்கள்.

சங்கத்தின் நிர்வாக சபை கூடி (12-1-1986 ல்) வருடாந்தக் கூட்டத்தை நடாத்துவதாகவும் கணக்குகள் சம்பந்தமாக உள்ள சிக்கல்களை தீர்மான உருவில் வருடாந்தக்கூட்டத்தின் தீர்மரனத்துக்குச் சமர்ப்பிப்பதாகவும் தீர்மானித்து 28.11 85 ல் சங்க அங்கத்தவர்களுக் கெல்லாம் சந்தா ஞாபகமூட்டல் அறிவிக்கப்பட்டபோதே 12.1.86 உருத்திரபுரத்தில் வருடாந்தக் கூட்டம் நடைபெறும் என்றும் முன்னேடியாக தெவிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

பின்பு இச்சங்கத்தின் "காந்தீயம்" என்ற செய்திப்பத்திரிகை மூலம் 27.12.85 ல் வருடாந்தக்கூட்ட நிகழ்ச்சி நிரல் பொதுச்செயலாளரின் ஆண்டு அறிக்கைகணக்கு 1979ம்ஆண்டு அறிக்கை முதலியன வெளியிடப்பட்டு ஒவ்வொரு அங்கத்தவர்களுக்கும் அனுப்பப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. எனவே சங்க வருடாந்தக்கூட்டத்தைப் பற்றி சிந்திக்க, தீர்மானிக்கக் கூடிய போதிய கால அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை யாரும் மறக்க முடியாது.

சகோதரர் திரு. கந்தசாமி வருடாந்தக்கூட்டத்திகதிக்கு 3 நாட்கள் முன்பே உருத்திரபுரம் தாம் வந்து விட்டதாக எழுதியுள்ளார் ஆனல்12-1-86 கூட்டத்துக்கு வந்ததும் "தனக்குக் கூட்டம் பற்றி எந்தஅறிவித்தலும் கிடைக்கவில்லை" என்று கூறினர் என்பது குறிப்பிடதக்கது.

ஒரு பொது அமைப்புக்கு அமைப்பு விதிகளே பாதுகாப்பானது. அதில்(கோரம்) குறைந்தது எத்தனை அங்கத்தவர் சமுகமாய் இருக்க வேண்டும் என்ற விதி கண்டிப்பாக இருக்கும். இதைச்சகோதரர் கந்தசாமி காணவில்லை போலும். 10 ம் திகதி தான் விடா மழை பெய்தது ஆனல் இவர் உருத்திரபுரம் வந்து விட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். 11ம் திகதி தூறல்இருந்தும் நல்லவெளிப்பு 12 ம் திகதிமழையே இல்லை. ஆனல் வாகனங்கள் யாழ்ப்பாணத்தில்இருந்தும்கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவனியா ஆகியவற்றில் இருந்தும் ஓடின. இதை யாரும் மறுக்க முடியாது. அக்கறை உள்ள அங்கத்தவர்களுக்குக்காலமும்போக்குவரவும் தடையாக இருந்தது என்று கூற முடியாது.

நிகழ்ச்சி நிரலின்படி காலை 9.30 க்கு கூட்டம் தொடங்கப் படவேண்டும். ஆனல்(அங்கத்தவர் வருகையை காத்து) கர

[5ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அ. இ. காந்தி...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

டிப்போக்குச் சந்தியில் இருந்து உருத்திரபுரம் வந்த 1 ம் வாகனம் 10 15 க்கும், 2 ம் வாகனம் 11 மணிக்கும் 3ம் வாகனம் 12 மணிக்கும் 4 ம் வாகனம் பிற்பகல் 1 மணிக்கும் வந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. எனினும் 10-30 மணிக்கு கோரம் இருந்ததும் கூட்டம் ஆரம்பமானது. அதன் பின் 11 மணிக்குவந்த வாகனத்தில் முல்லைத்தீவில் இருந்து வந்த அங்கத்தவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கூட்டம் தொடங்கியதும் திரு. கந்தசாமி அவர்கள் நிகழ்ச்சி நிரலுக்கு அப்பாற் பட்ட விஷயத்தை பேசத் தொடங்கியதும் சபை உறுப்பினர்களின் ஆட்சேபனையையடுத்து தொடர்ந்து பேசாமல் தலைவரால் நிறுத்தி வைக்கப்பட்டதும் திரு. கந்தசாமி தாம் உண்ணாவிரதமிருக்கப்போவதாக் கூறி ஆசனத்தில் சிறிது நேரம் இருந்து விட்டு வெளியேறினார். அவர் வெளியேறிய பின்பு கூட்டம் சுமார் 2 மணித்தியாலம் நடந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

கூட்டம் மௌனப்பிரார்த்தனையுடன் ஆரம்பமானது. சபையின் தீர்மானப்படி நாம் தற்காலிக தலைவராக இருந்து கூட்டத்தை நடாத்தினோம். கூட்டம் சங்க அமைப்பு விதிகளின்படி முறையாக நடந்தது. கூட்டத்தை பின்போடுவதா, தொடர்ந்து நடாத்துவதா என்று சபையில் தீர்மானம் கேட்டபோது தொடர்ந்து நடாத்த வேண்டும் என ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. இதன்படியே நிகழ்ச்சி நிரலின்படி ஆண்டு அறிக்கை சென்ற வருடாந்த கூட்ட அறிக்கை கணக்கு அறிக்கைகள் வாசித்து ஆராயப்பட்டபின் புதுவருட உத்தியோகத்தர் நிர்வாக சபை உபகுழுக்கள் தெரிவு முறைப்படி நடைபெற்றன எனவே 12 - 1 - 86 ல் உருத்திரபுரம் காந்தி நிலையத்தில் நடந்த அகில இலங்கை காந்தி சேவா சங்க 36-ம் வருடாந்தப் பொதுக்கூட்டம் முறையாக கூட்டப்பட்டது. அமைப்புவிதிகளின்படி கூட்டத்துக்கு நிறைவு எண்ணுக்கு மேல் அங்கத்தவர்கள் சமுகமாயிருந்து கூட்டத்தை நடாத்தினார்கள். அபிப்பிராய பேதம் உள்ளோர் கூட்டத்தில் சமுகமாயிருந்து நிகழ்ச்சி நிரலுக்கமைய தங்கள் கருத்துக்களை கூறுவதுதான் ஜனநாயக மரபு என்பதை பணிவுடன் தெரிவிக்கின்றோம்.

சி. க. வேலாயுதபிள்ளை
காந்தி நிலையம்,
உருத்திரபுரம்.

## லலித்துடன்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

எம். பஞ்சலிங்கம், வடமாநில கல்விப்பணிப்பாளர் திரு. எம் சிமியாம்பிள்ளை, வ. பி. போ. ச. தலைவர் திரு. எஸ். கனகரத்தினம், யாழ். வைத்திய அத்தியட்சகர் திரு. சி. எஸ். நச்சினார்க்கினியன், யாழ். மேல்நீதிமன்ற பதிவாளர் திரு சி. மகேந்திரன், யாழ். நீதவான் நீதிமன்ற பதிவாளர் திரு. எஸ் பெரியதம்பி சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் திரு. என். கனகசபை, கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. என். சண்முகலிங்கம், யாழ். வேம்படி மகளிர் கல்லூரி அதிபர், யாழ். மத்திய கல்லூரி பிரதிநிதி ஒருவர் ஆகியோர் கொழும்பு சென்றுள்ளார்கள்.

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம், யாழ். மாவட்ட நீதிமன்றப்பதிவாளர், காணிப் பதிவாளர், தபால்நிலைய அதிபர், தொழில் இலாகா, வருமானவரி இலாகா மற்றும் கோட்டையைச் சுற்றியுள்ள அரசாங்க இலாகா பிரதிநிதிகளும் இம்மாநாட்டில் பங்குபற்றுமாறு அழைக்கப்பட்டுள்ளனர். யாழ். மாநகரசபை ஆணையாளர் ஏற்கனவே கொழும்பு சென்றுள்ளார்.

(க)

## வட்டக்கச்சியில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

லது காயமடைந்திருக்கலாம் என்றும் அஞ்சப்படுகிறது.

வட்டக்கச்சிப் பகுதியில் ஹெலிகொப்டர் உயரப்பறந்து வட்டமிடுவதாகவும், கீழ இறங்கமுடியாத நிலையில் உள்ளதாகவும் கூறப்படுகிறது

இச் சம்பவங்களை அடுத்து வட்டக்கச்சி, கிளிநொச்சி முதலான பகுதிகள் பதற்றநிலையில் உள்ளன.

## அத்தியாவசிய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னங்கள் தவிர்ந்த ஏனைய கிளை ஸ்தாபனங்கள் ஆகியவற்றில் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பது, பராமரிப்பது, உணவு வழங்குவது போன்ற சேவைகளை இந்த அலுவல்கள் சம்பந்தமாக தொழிலாளர் சேவை மற்றும் ஏனைய சேவைகள்யாவும் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தசட்ட விதிகளை எவரேனும் மீறும் பட்சத்தில் அவர்கள் நீதிமன்றின்முன் நிறுத்தப்பட்டு குற்றவாளியாகக் காணப்படும் பட்சத்தில் அவர்கள்மீது நீதிமன்றம் வழங்கப்படும் தண்டனைகளுடன் அவர்களின் அசையும் அசையா சொத்துக்களும் அரசாங்கத்தால் சுவீகரிக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச)

## 31ம் நாள் நினைவு அஞ்சலி



**கந்தையா ஆறுமுகம்**
(முன்னாள் இ. போ. ச. ஊழியர்)

தோற்றம்: 01-02-1925
மறைவு: 02-01-1986

அன்பே வடிவாகி ஆருயிர்த் துணைவராகி, இனிய தந்தையாகி, ஈடில்லா மாமனாராகி, தாத்தாவாகி, உண்மை வழிகாட்டி, அருளின்அமுதூட்டி, எம்மை ஆளாக்கிய உத்தமரே! எம் நினைவில் நீங்காது ஒளிர்கின்றாய்.

அன்னாருக்கு பல்வேறு வகையில் அஞ்சலிசெலுத்திய அனைவருக்கும் எமது நன்றியறிதலை வணக்கத்துடன் தெரிவிக்கின்றோம்,

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

சிறுவிளான்
இளவாலை. C 494

## நேற்று ..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

நாலாபக்கமும் சிதறி ஓடத் தொடங்கினர். பதற்றநிலையல் கடைகள் இழுத்து மூடப்பட்டன. வாகனங்கள்விரைந்தன. நகரம் வெறிச்சோடியது

எந்தவித அசம்பாவித சம்பவமும் நிகழாதநிலையில் மக்கள் சுதந்திரமாக நகரில்நடமாடிக் கொண்டிருந்தபொழுதே இக் குண்டுத்தாக்குதல் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. (மா)

## சட்டமூலம்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

### சுதந்திரா வெளிநடப்பு

சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் நேற்று பாராளுமன்றத்தில் இருந்து வெளிநடப்புச் செய்தனர்.

இவர்களுடன் மக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த திரு. தினேஷ் குணவர்த்தனவும் வெளிநடப்பு செய்தார்.

நாடற்றவர்களுக்கு பிரஜாவுரிமைகள் வழங்குவதற்கான சட்டமூலம் நேற்று பாராளுமன்றத்தில் குழுநிலையில் ஆராயப்பட்டபோது சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்களும், திரு. தினேஷ் குணவர்த்தனவும் வெளிநடப்புச்செய்தார்கள்.

### லக்ஷ்மன் கோரிக்கை

சம்பந்தப்பட்ட சட்டமூலத்தில் இருந்த ஒன்பது ஷரத்துத்துக்களையும் நீக்கிவிடும்படி அத்தனகலத் தொகுதி எம். பி. திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி சபையில் கோரிக்கை விடுத்தார்.

ஒன்பது ஷரத்துக்களையும் நீக்கிவிட்டால் சட்டமூலமே இருக்காது என்று கூறிய சபாநாயகர் அதற்கு அனுமதி வழங்க மறுத்தார்.

இதன் பின்னர் அவர் ஒன்பது ஷரத்துக்களையும் ஒவ்வொரு ஷரத்தாக சபையின் அங்கீகாரத்திற்காக விட்டபோது திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடியும் திரு. தினேஷ் குணவர்த்தனவும் எழுந்து நின்று அதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதனையடுத்து சபையில் பெருத்த கூச்சல் இடம்பெற்றது.

இந்தக் கூச்சலினிடையே சிறிலங்கா சுதந்திரக்கட்சி அங்கத்தவர்களும், திரு. தினேஷ் குணவர்த்தனவும் சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.

### வெளிநடப்பு

எதிர்க்கட்சித்தலைவர் திரு. அனுரா பண்டாரநாயக்க, மத்துகம எம். பி. திரு. அனில் முனசிங்க, கொழும்பு மத்திய தொகுதி 3வது அங்கத்தவர் ஜனாப் ஹாலீம் இஸாக், கொத்மலை எம். பி. திரு. ஆனந்த தஸநாயக்கா, பத்தேகம எம். பி. திரு, அமரசிறி தொடங்கொட, மதவாச்சி எம். பி. திரு. மைத்திரிபால சேனநாயக்கா ஆகியோர்சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்துவெளிநடப்புச் செய்த அங்கத்தவர்களாவர்.

இவர்களின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து இந்தச் சட்டமூலம் சபையின் அங்கீகாரத்தைப்பெற்றது,

மீண்டும் சபையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டபோது களனித்தொகுதி எம். பி திரு சிறில்மத்யூ சபையில் காணப்படவில்லை. [ய-து]

## 5 ஊர்காவல் படையினர் சுட்டுக்கொலை

(சென்னை)

மூதூர் பகுதியில் தமிழ் மக்களைத் துன்புறுத்தியும் கொள்ளையடித்தும், சூறையாடியும் வந்த ஐந்து ஊர்காவல் படையினரை சுட்டுக்கொன்றுவிட்டதாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சென்னையில் வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது,

[இ-பி]

## அரசியல்--

(1-ம் பக்கத்தொடர்ச்சி]

கிறது. இவையெல்லாம் போர் நிறுத்த உடன்பாட்டை மீறும் நடவடிக்கைகள் ஆகும்.

''கடந்த சில வாரங்களாக இலங்கையில் பெருமளவுஉயிரிழப்புக்கள்நேரிட்டுள்ளன. இவ் உயிரிழப்புக்களை தவிர்த்திருக்கலாம். இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ரொமேஷ் பண்டாரி எதிர்வரும் திங்கட்கிழமை இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த அங்கு செல்கிறார். அதுவரை நாம் பொறுத்திருந்துபார்க்க வேண்டும்' என்றார்.

[ச]

## தொண்டமனாறு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வெடிச்சத்தமும் துப்பாக்கிச் சூட்டுச் சத்தமும் தொடர்ச்சியாகக் கேட்டவண்ணமிருந்தன.

இந்த நேரடி மோதலின் போது போராளிகள் தரப்பில் 'தமிழீழ விடுதலைப் புலிகளி'ன் திருகோணமலையைச் சேர்ந்த (சுருளி) பாலசிங்கம் மனோகரன் என்பவர் பலியானதாக 'புலிகள் இயக்கம்'விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தின் தரப்பில் ஏற்பட்டுள்ள சேத விபரம் பற்றி எதுவும் உடனடியாக தெரிவிக்கப்படவில்லை (மா)

## மூதூர் நிலைமை—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கட்டைபறிச்சான் பகுதியில் நேற்றுமுன்தினம் தேடுதல் வேட்டை மேற்கொண்ட ஹெலிகொப்டர் ஒன்றைதீவிரவாதிகள் நேற்று சுட்டதில் அதில் இருந்த அதிகாரியொருவர் காயமடைந்துள்ளதாகவும் ஹெலிகொப்டருக்கும் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதே நேரத்தில், மூதூர் சமாதானக்குழுவைச் சேர்ந்த சித்திரவேல, குழந்தைவேல் ஆகிய இரு அங்கத்தவர்களும் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

மூதூர் அகதிமுகாமிலிருந்த இருவர் ஆயுதப்படையினரால் கூட்டிச் செல்லப்பட்டனர். அதே நேரத்தில் நேற்றுமுன்தினம் மூதூர் கத்தோலிக்க கோவிலில் வைத்து இருவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

மல்லிகைத்தீவு எனுமிடத்தைச் சேர்ந்த செ துரைநாயகம் என்ற பாடசாலை அதிபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

[ச]


### கடைசிநேர வரிவிளம்பரம்

**விற்பனைக்கு**

2 பலாமரம் விற்பனைக்கு உண்டு. 90/4, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.
[C 480]

Broliers இறைச்சிக் கோழிகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம் — நல்லூர் வீடியோ சென்றர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். C 479

**எம்பயர் திரையில்**
10-30, 2-30, 6-30,
தியாகராஜன்—சுலக்சனா
**முரட்டுக் கரங்கள்**

**லிடோ சினிமா**
10-30, 2-30, 6-30
கார்த்திக்—ராதா
நடித்த
**அலைகள் ஓய்வதில்லை**

**வெலிங்டன்**
10-30, 2-30, 6-30
சிவாஜி— கே. ஆர். விஜயா
நடித்த
**நெஞ்சிருக்கும் வரை**
(புதிய பிரதி)

புதிய வெளியீடு
**நவா மினி**
கே. கே. எஸ். வீதி, யாழ்.

தனது குழுக்களை இராணுவம் அழித்தது. தலைவன் தப்பி பின்னர் 5 இராணுவ விமானங்களையும் அழித்து பல இராணுவவீரர்களையும் கொன்று பழிதீர்த்தான்.
Richard Harris
Richard Roundree
in
GAME FOR VULTURES
C 484

St, JOHN S COLLEGE, JAFFNA
**VACANCY**

Wanted a graduate to teach chemistryand double maths in the G C E. (Advanced level) classes temporarily for one year. Please call over at college office with relevant certificates on wednesday the 5th of february at 1-30 p. m.

PRINCIPAL.
A-176

**நியூவிக்ரேஸ்**
**புதிய வீடியோபட வெளியீடுகள்**

1. கண்மணியே பேசு
★ சிவகுமார் ★ லக்ஷ்மி

2. ராஜா நீ வாழ்க
★ பிரபு ★ அம்பிகா

**நியூ விக்ரேஸ்** எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ்.
தொலைபேசி: 23532

**கொன்சல்டன்சி அன்ட் பிறென்ஸ் அன்ட் டெவலப்மென்ற் லிமிட்டெட்**
**மேர்ச்சன்ற் பிறென்ஸ் லிமிட்டெட்**
**அங்கத்தவர்கட்கு அறிவித்தல்**

இன்று (1-2-86) நடைபெறவுள்ள மேற்படி ஸ்தாபனங்களின் பொதுக்கூட்டங்கள், முன்னைய ஸ்தாபனத்தின் ஆலோசனை முகாமையாளரும், பின்னைதயன் இயக்குநருமான திரு. வி. கார்த்திகேசு காலமானதால், ஒத்திவைக்கப்பட்டுள்ளன அடுத்த திகதி அங்கத்தவர்கட்கு தனித்தனியாக அறிவிக்கப்படும்.

யோ. முருகேசு
காரியதரிசி
A 177


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ. 5 லட்சம் செலவில் கம்பன் தமிழ்க் கோட்டம்

[யாழ்ப்பாணம்]

அகில இலங்கை கம்பன் கழகத்தினர் நல்லூரில் கம்பன் தமிழ்க் கோட்டம் என்னும் நிலயத்தை அமைக்கவுள்ளனர். கடந்த காலங்களில் பல இலக்கியப் பணிகளை ஆற்றி வந்த அகில இலங்கைக் கம்டன் கழகத்தினர் புதிதான இம் முயற்சியைத் தொடங்கியுள்ளனர். இலங்கையில் கவிச் சக்கரவர்த்தி கம்பனின் பெயரால் அமையப்போகும் இந் நிலயம் தமிழுக்கென அமையும் முதல் நிலயமாகும். இது தமிழரின் மொழி, கலை, கலாசாரம் ஆகியவற்றைப் பேணிப் பாதுகாக்கும்.

இந் நிலையத்திற்கான காணியை யாழ். மாநகரசபை ஆணையாளர் நல்லூர் தேவஸ்தானத்திடமிருந்து பெற்றுக் கொடுத்துள்ளார். கம்பன் கழகத்தைக் கட்டிவளர்த்த அமரர்கள் கம்பனடிப்பொடி சா. கணேசன், பேராசிரியர் இ ர ா. இராதாகிருஷ்ணன், வித்துவான் சி. ஆறுமுகம், ஆசிரியர் தேவன், கிருமலை பெ. பொ. சிவசேகரம் ஆகியோரின் நினைவை இக்கட்டிடம் தாங்கி நிற்கும்.

கம்பன் கோட்டம் இருமாடிகளைக் கொண்டதாக அமையும். இதன் கீழ் மாடியில் ஐந்து தங்கும் அறைகளோடு குயலறை, சமையலறை ஆகியவை யும் அமையும். மேல் மாடியில் சிறிய கருத்தரங்கு மண்டபமும், சிறு நூலநிலையமும் அமையும். இக்கட்டிடத்திற்கான முழுச் செலவும் சுமார் ஐந்து லட்சம் ரூபா என மதிப்பிடப் பட்டுள்ளது. தமிழகத்திலேயே கம்பன் கோட்டம் இன்னும் அமையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்நற்பணியில் அனைத்துத் தமிழ் அன்பர்களினதும் பேராதரவை அகில இலங்கைக் கம்பன் கழகத்தினர் வேண்டி நிற்கின்றனர்.

# 'ஹாபர்வியூ ஹோட்டல் முகாமை வேறு இடத்துக்கு மாற்றவும்'

## கீரிமலை பிரஜைகள் குழு மகஜர்

[மாவிட்டபுரம்]

''பாதுகாப்பு வலயச் சட்டம் அரசாங்கத்தால் தீவிரமாக அமுல்செய்யப்பட்டுள்ளதால் கீரிமலை வாழ் பொதுமக்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் 'ஹாபர் வியூ ஹோட்டல்' இராணுவமுகாம் கீரிமலைக்கு அணித்தாக உள்ளதால் அரசால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலயத்திற்குள் கீரிமலை புனித ஸ்தலம் அடங்குகின்றது இதனால் சமய சம்பந்தமான வழிபாடுகளையும், சமயக் கிரியைகளையும் செய்யமுடியாமல் சைவ மக்கள் பாதிப்படைந்துள்ளனர். எனவே இப்பகுதி மக்களுக்கு உதவும் வகையில் 'ஹாபர் வியூ ஹோட்டல்' இராணுவமுகாமை சனநடமாட்டமில்லாத பகுதிக்கு மாற்றி அமைக்கவேண்டும்'' என்று கீரிமலை பிரஜைகள் குழு பொதுமக்கள் சார்பில் வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபரிடம் கையளித்துள்ள மகஜரில் தெரிவித்துள்ளது.

கீரிமலை பிரஜைகள் குழுவினரின் சார்பில் கீரிமலை பஸ் நிலயத்திலிருந்து தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் காரியாலயம் வரை எழுச்சி ஊர்வலமொன்று நடத்தப்பட்டது. பிரஜைகள் குழுவினர், அன்னையர் முன்னணியினர், பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் சுமார் ஐந்நூறு பேர் சுலோக அட்டைகள் தாங்கி, கோஷங்களை ஒலித்த வண்ணம் எழுச்சி ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

பொதுமக்கள் கையொப்பமிட்டு உதவி அரசாங்க அதிபரிடம் கையளித்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''பிரகடனம் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு வலயத்துள் காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை, லங்கா சிமெந்துத் தொழிற்சாலை உள்ளடக்கப்படுவதால் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லமுடியாதுள்ளது. மறுபுறமுள்ள கீரிமலை-மாவிட்டபுரம் வீதியால் செல்பவர்களும் இராணுவத்தினரின் செயலால் அச்சமடைந்துள்ளனர்.

கீரிமலைக்கு அணித்தாகவுள்ள வலித்தூண்டல் கிராமத்தில் கடற்தொழில் செய்து சீவிப்பவர்கள் தொழிலுக்குப் போகமுடியாமல் அன்றாடப் பட்டினியை எதிர்நோக்கியிருக்கின்றனர். தினம் தினம் நிலவும் பதற்றம், பயம் காரணமாகப் போக்குவரத்துச் சேவைகள் திடீரென ஸ்தம்பிப்பதால் நோய்வாய்ப்பட்டவர்களையும், கர்ப்பிணிப் பெண்களையும் உடன் வைத்தியசாலைக்கு அனுப்ப முடியாமல் உள்ளது.

எனவே இவற்றை நீக்கி வைக்க அரசு உடன் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்''


I. D. P. M.

INSTITUTE OF DATA PROCESSING MANAGEMENT

PART I
Data Processing I
People Communication & Information in Organisations
Accounting methods
Commencing on 10th Feb, 1986

&

PART II
Data Processing II
Programming & Operations
Quantitative methods
Commencing on 10th Feb, 1986

JULY 1986 முதல்
PART III & PART IVஉம் நடாத்தப்படும்
உடன் பதிவு செய்துகொள்க.


NORTH CEYLON TECHNICAL INSTITUTE

14, ST. PETERS LANE,
HOSPITAL ROAD, JAFFNA.
T. Phone: 24355


## இறைவன் அழைப்பையேற்று

# "வசதிபடைத்தவாழ்வை துறந்து பணிபுரிந்தார்"

[யாழ்ப்பாணம்]



''இறைவனின் இனிய அழைப்பின் குரல் கேட்டு வசதி டைத்த வாழ்வைத் துறந்து, கிறிஸ்தவ மறையைத் தழுவி, ஒரு அமலமரித்தியாகியாக தம்மை அர்ப்பணித்து குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டு, ஏறத்தாழ அறுபது ஆண்டுகள் அரும் பணியாற்றி இறைவனடி சேர்ந்துள்ளார் எமது தார்சீசியஸ் சுவாமிகள்'' என்று அடிகளாரது இறுதி திருச்சடங்கின் போது அருட்திரு. ஏ பிரான்சிஸ் அமதி அடிகளார் தெரிவித்தார்.

யாழ். மரியன்னை பேராலயத்தில் இம்மாதம் 23 ம் தேதி மாலை அடிகளாரது இறுதிச் சடங்குகள் நடைபெற்றன, யாழ் ஆயர் அதி மேன் வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையின் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்ட இரங்கற் கூட்டுத் திருப்பலிக்கு குருக்கள், கன்னியர்கள், இறைமக்கள், இந்து சகோதரர்கள் திரண்டிருந்தனர்.

தாம் வழங்கிய இரங்கலுரையில் காலஞ்சென்ற தார்சீசியஸ் சுவாமியின் வாழ்க்கை வரலாற்றில் நிகழ்ந்தேறிய முக்கிய கட்டங்களாக அன்னார் பிடிவாதத்துடன் ஆற்றிய விசுவாச யுத்தத்தின் யுக்திகளை எடுத்துச்சொன்னார். இரங்கலுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

இரத்தினராசா தார்சீசியஸ் சுவாமிகள் சிறு வயதிலே அவரின் தந்தை, யாழ் பிரபல வர்த்தகர் சி. வீரகத்திப்பிள்ளை என்பவர் கல்வி பயிலுவதற்கென்று சம்பத்திரிசியார் கல்லூரியில் சேர்த்து, ஆசிரியரின் வீட்டிலே தங்கமாகத் தங்க வைத்து, பாடசாலை செல்வதற்கென்று சொகுசான ஒரு குதிரை வண்டியும் ஒழுங்கு செய்திருந்தார். இளைஞன் இரத்தினராசா தொண்டமனாற்றிலே வசதி படைத்த குடும்பத்திலே தோன்றினாலும், உலக சுக போகங்களில் அவரது மனம் மயங்கவில்லை. மாறாக, இறைவனையே அவர் தேடினார். தான் கிறிஸ்தவ மறையைத் தழுவ விரும்புவதாக தனது பாடசாலை அதிபரான மறைந்த மத்தியூஸ் அடிகளாரின் இணக்கத்தை நாடினார். அதற்கு ஆரம்பத்திலே விடை கொடுக்கத் தயங்கினாலும், ஈற்றில் இளைஞன் இரத்தினராசாவுக்கு திருமுழுக்கு அளித்து, ''தார்சீசியஸ்'' என்னும் புதிய கிறிஸ்தவபெயர் சூட்டினார். அது மட்டுமல்ல அவர் குருமடத்தில் சேர்ந்து, அமலமரித்தியாகிகள் சபையில் குருவாகத் திருநிலைபடுத்தப்பட்டார், என்றால் அது ஆண்டவரின் அருட்பெரும் செயலே.

அடிகளார் பேசாலை, அனுராதபுரம், முருங்கன், நாவாந்துறை, மானிப்பாய், ஊர்காவற்றுறை, மயிலிட்டி ஆகிய பங்குகளில் இறைபணி புரிந்தார். பல பங்குகளில் தேவாலயங்களையும் நிறுவியதுடன், வசதியற்ற அனாதைகள் மட்டில் மிகவும் அக்கறை காட்டினார். அவர்களைக் கல்வியிலும், சமூக வாழ்விலும் முன்னேற்றி வைத்தார். முருங்கன் அனாதைகள் இல்லத்தை இவரே ஆரம்பித்து அதன் வளர்ச்சிக்காக கடினமாக உழைத்தார் அங்கு பயின்ற மாணவர்கள் பலரின் மேற்படிப்பிற்கும், வளர்ச்சிக்கும் வழி வகுத்தார். அவர்களில் சிலர் இன்று நம் மத்தியில் உள்ளனர் என்பதையிட்டு நாம் ஓரளவு ஆறுதல் அடைகின்றோம்.

இவர் ஆற்றிய அரும் பணிகளின் பயனாய் யாழ்/மன்னார் மறை மாவட்டங்களில் பல ஆன்ம சமூக நன்மைகள் ஏற்பட்டுள்ளன. இக்குருவின் ஆன்மா இறைவனின் அருள் ஒளியில் என்றும நிலைத்திருக்க நாம் இறைவனை உருக்கமுடன் வேண்டுவோம் - என்றார் இரங்கல் உரையில் மறை போதகர்

# வர்த்தகர்கள் அஞ்சலி



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வர்த்தக சங்கப் பொருளாளராயிருந்து கடந்த 27ம் திகதி அமரரான பிள்ளையார் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் திரு. கணபதிப்பிள்ளை இராசதுரையின் இறுதிக் கிரியைகள் நேற்று வியழக்கிழமை நடைபெற்றது. ஏராளமான வர்த்தகப்பிரமுகர்களும், அபிமானிகளும் மானிப்பாய் வீதியிலுள்ள அன்னாரது இல்லத்துக்குச் சென்று மது அஞ்சலியைச் செலுத்தினார்கள்

கடந்த 83ம் ஆண்டு ஜூன் 1ம் திகதி யாழ் நகரில் இடம்பெற்ற பாரிய அசம்பாவிதங்களின்போது திரு இராசதுரையின் வர்த்தக நிறுவனம் தீயில் சாம்பலானபோதும் மனம் தளராது நிறுவனத்தை பன்மடங்கு விரிவாக்கித் தொடர்ந்து சேவையாற்றியதும், அவரது யாழ்- கொழும்பு போக்குவரத்துச் சேவை அடிக்கடி பல அனர்த்தங்களை எதிர்கொண்டபோதிலும் சளைக்காமல் அச்சேவையைத் தொடர்ந்து நடத்தி வந்ததும் சாதனைகளாகக் கருதப்பட்டன.

வேலணை பெரியபுலம் மகாகணபதிப்பிள்ளையாரின் பக்தரான திரு இராசதுரை அவ்வாலய பரிபாலன சபையின் தலைவராயிருந்து அதன் இராஜகோபுர திருப்பணியை பொறுப்பேற்று நடத்தினார்.

## மகாபொல மாணவருக்கு

[யாழ்ப்பாணம்]

மகாபொல புலமைப் பரிசில் வழங்கும் வைபவம் இவ்வருடம் குருநாகலை மாவட்டத்திலுள்ள பன்னலயில் பெப்ரவரி மாதம் 14-ம் திகதி நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இப்புலமைப் பரிசில் பெறும் மாணவர்கள் தமக்குரிய அழைப்பிதழையும் இருக்கை அனுமதிப்பத்திரத்தையும் இம் மாதம் 1-ம், 3-ம், 6-ம் திகதிகளில் பல்கலைக்கழக மாணவ ஆலோசனை மண்டபத்தில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இன அழிவைத் தடுக்க இலக்கியங்கள் பேணப்பட வேண்டும்"

(யாழ்ப்பாணம்)

"இலக்கியங்களே சமகாலச் சரித்திரங்கள். அவையே ஒரு சமூகப் பண்பாட்டின் பதிவேடுகள். அத்தகைய இலக்கியங்கள் பேணப்படுவதன் மூலமே ஒரு இனத்தின் அழிவைத் தடுக்க முடியும். அந்த வகையில் இலக்கியம் படைக்கும் எழுத்தாளர் இன அழிவைத் தடுக்கும் போராளிகள். அவர்களுக்கு மக்களின் ஆதரவு இன்றியமையாதது".

தென்புலோலியில் உள்ள புற்றளை மகாவித்தியாலத்தில் அறிமுக விழா 'மூட்டத்தினுள்ளே' ஓர் அடிமையின் விலங்கு அறுகிறது' ஆகிய நூல்களின் அறிமுக விழாவிற்குத் தலைமை தாங்கிய பண்டிதர் வி. பரந்தாமன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ்விழாவில் ஆசியுரை வழங்கிய டாக்டர் முருகானந்தன் தமதுரையில் "கல்வி ரீதியில் நாங்கள் பலகாலமாக அடக்கப்பட்டு வருகிறோம். போராட்டத்தின் மத்தியிலும் மொழி வளர்ச்சி இருப்பதை நாங்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும். இக்காலகட்டத்தில் தான் பல இலக்கிய நூல்கள் வெளிவர வேண்டும்" என்றார்.

திரு. தேவராஜன். "தமது உரையில் தமது இலக்கியப் பாரம்பரியங்களைப் பேணிக் காக்காத மக்கள் பின் தங்கியவர்களாகிறார்கள்" என்றார்.

திருமதி பெற்றி ஞானேஸ்வரன் தமது ஆய்வுரையில் "நீண்ட காலத்திற்கு ஈழத்து இலக்கிய உலகில் நின்று பிடித்து எமது தக்கூடிய எழுத்தாளர்களே இன்று எமக்குத் தேவை. அப்படியானவர்கள் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கை இப்போது எமக்குள் மொட்டவிழ ஆரம்பித்திருக்கிறது" என்றார்.

திரு. நெல்லை க. பேரன் தமது ஆய்வுரையில் "சமுதாய அழுக்குகளைக் களைவதற்காகவே இன்றைய இலக்கியங்கள் படைக்கப்படுகின்றன" என்று குறிப்பிட்டார்.

தெணியான் பேசுகையில் "சகோதர எழுத்தாளர் ஒவ்வொருவரையும் கௌரவிக்க வேண்டும் என்ற ஒற்றுமைப் பண்பு ஈழத்து எழுத்தாளர்களிடம் சிறப்பாகக் காணப்படுகிறது" என்றார்.

திரு. ஏகாம்பரநாதன், செல்வி சந்திரா தியாகராஜா நூலாசிரியர்களான திருமதி கோகிலா மகேந்திரன், புலோலியூர் ஆ. இரத்தின வேலோன், புலோலியூர் க. சதாசிவம் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

## கிராம அபிவிருத்தியில் முன்னணி

[யாழ்ப்பாணம்]

வட்டு மேற்குஇந்துஇளைஞர் காலாச்சார மன்றத்தின்முயற்சியால் கலாச்சார மன்யத்திற்கருகாமையால் பூங்கா ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இம்மன்றத்தின் கீழ் பரமானந்தசிவம் ஞாபகார்த்த நூல் நிலையம் இயங்கிவருவதுடன் இம்மன்றம் கிராம அபிவிருத்தி கருதி பாடசாலை மாணவர்களிடையே சமய அறிவுப் போட்டிகளை நடாத்தி பரிசில்கள் வழங்குதல், பஜனை, கூட்டுப்பிரார்த்தனை போன்றவற்றை நடாத்தி மக்களிடையே சமயப்பற்றை வளர்த்தல், விளையாட்டுத்துறையில் சிறுவர்களை ஈடுபடுத்தி சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்குதல் உட்பட பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இம்மன்றத்தின் செயற்பாடுகள் குறித்து அப்பகுதி மக்கள் மன்றத்தை பெரிதும் பாராட்டியுள்ளனர். (ச)

## 12 இராணுவ

[3ம் பக்கத் தொடர்ச்சி]

தான் உங்களைச் சுட்டார்கள் நாங்கள் உங்களை ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோக வந்திருக்கிறோம். என்றுகூறி ட்ரக் ஒன்றில் ஏற்றி ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோனார்கள். அங்கிருந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட என்மனைவி அங்கு மரணமானார்.

பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டு, விசாரணை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. [க]

## ஏமாற்றி பொருள் அபகரிப்பு

[யாழ்ப்பாணம்]

அம்மாவைப் பார்க்க வாருங்கள் என, தனது சகலனையும் அவரது மனைவியையும் கூட்டிச்சென்றவர் அவர்களை இடைவழியில் ஏமாற்றிவிட்டு சகலரின் மனைவியினுடைய தங்கச் சங்கிலி, தோடு என்பவற்றை கொள்ளையடித்துக்கொண்டு சகலனின் சைக்கிளுடன் தலைமறைவாகிவிட்டாராம்.

ஊரெழுவைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை குணரட்ணம் என்னும் கூலித் தொழிலாளியின் பொருட்களே அவரது சகலனான கனகசபை நந்தகுமார் என்பவரால் அபகரிக்கப்பட்டதாகப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை பட்டப்பகலில் நடைபெற்ற இக்கொள்ளையின்போது அபகரிக்கப்பட்ட பொருட்களின் பெறுமதி ரூபா 8,500 என மதிப்பிடப்பட்டுள்ளது. [ச]

# இன்றைய பலன்

மாதம்: தை
திகதி: 19 [1986-2-1]
கிழமை: சனிக்கிழமை
திதி: ஸப்தமி முன்இரவு
நட்சத்திரம்: சித்திரை பிற்பகல்வரை

மேடம்: செய்தொழிலால் சிறப்புண்டு. பெரியவர்களின் ஆதரவும் உண்டு. இசைத் துறையிலும் ஈடுபாடு ஏற்படும்.

இடபம்: பொருள்துறையில் எதிர்பாராத நெருக்கடி ஏற்படும். புதிய மூதலீடுகளைத் விர்க்கவும். தொழில் புரியுமிடத்தில் போட்டி மனப்பான்மையைத் தவிர்த்துக் காள்ளவும்.

மிதுனம்: குடும்பத்தில் சிறு பூசல் தோன்றக்கூடும். பெரியவர் ஒருவருடன் கருத்த மோதல்கள் தோன்றக்கூடும் அமைதியுடனிருக்கவும்.

கடகம்: துணிச்சலுடன்காரியங்களைச் சாதிப்பீர்கள். சிலருக்குப் பொதுசனத் தலைமையும் கிடைக்கும். விவசாயிகள் வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டு.

சிங்கம்: குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். புதுமையான சம்பவங்களும் இடம்பெறும் சிலருக்கு அதிர்ஷ்டலாபங்களுக்கும் இடமுண்டு.

கன்னி: நீண்டநாள் கடன் இன்று நிவர்த்தியாகும். பிணி அகலும். உங்கள் உதவிக்கு புத்திரர் விரைவர்.

துலாம்: பிரயாணத்தின் போது பொருள் தவறக்கூடும். சிலருக்கு உடல்நலமும் பாதிக்கப்படலாம். அதிக நம்பிக்கை வைப்பதன்மூலம் சஞ்சலப்பட நேரும்.

விருச்சிகம்: பிறருக்கு உதவுவதில் முன்நிற்பீர்கள். இதன் மூலம் பணம் செலவாகும் அரசியல்வாதிகளுக்கு அதிர்ஷ்டதினம்.

தனுசு: திரைமறைவில் சதித்திட்டம் உருவாகும் அடுத்துக் கெடுப்பதற்கு எதிரிகள் முனைவர். கடற்றொழிலாளர்கள் கவனம் செலுத்தவும்

மகரம்: நூதன ரோகங்கள் தென்படலாம். கலைஞர்கள் போற்றப்படுவர். தாய்வழிச் சுகக்குறைவும் உண்டு.

கும்பம்: செய்தொழில் மூலம் சிறப்புகள் கிடைக்கும். பொருள்வரவும் உண்டு சகோதரப் வழியால் சஞ்சலமுண்டாகும்.

மீனம்: உறவாடிக் கெடுப்பதற்கு பகையாளிகள் வருவர். உற்சாகம் குன்றும். உறவினர் மத்தியில் பூசல்கள் தலைவிரித்தாடும்.

திருமலை
வே. ரவீந்திரன்

# "நாணயத்தை நம்பத் தயாரில்லை!"

## அடகுவைத்து ஏமாற்றப்பட்டோர் கண்டனப் பிரசுரம்

(யாழ்ப்பாணம்)

"மக்கள் வங்கியின் நாணயத்தையும் நேர்மையையும் இனி நாம் நம்பத் தயாரில்லை. மக்களை ஏமாற்றும் மக்கள் வங்கியும் தேவையில்லை. வாடிக்கையாளர்களே உங்கள் நிலையான வைப்புப் பணங்களை உடனடியாக மீட்டுக்கொள்ளுங்கள். ஓய்வூதியக்காரர்களே, மாற்று நடவடிக்கை எடுத்துக் கொள்ளுங்கள்" இவ்வாறு 'அடகு வைத்து ஏமாற்றப்பட்டோர்' என்று கையொப்பமிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"அடகுவைத்தோர் சங்கம் ஆக்கபூர்வமான சில நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்ததால் நாமும் அவர்களோடு சேர்ந்து ஆர்ப்பாட்டங்கள், மறியற் போராட்டங்களில் கலந்துகொண்டு பூரண ஒத்துழைப்பை வழங்கியிருந்தோம் ஆனால் சங்கம் கலைக்கப்படவுள்ளதைச் சில தினங்களுக்கு முன் பத்திரிகை வாயிலாக அறிந்ததும் மிகுந்த வேதனையும் விரக்தியும் அடைந்த நாம், கடந்த ஜனவரி 9ம்திகதியன்று யாழ். மக்கள் வங்கியின் பிராந்திய அலுவலகத்திற்கு நூற்றுக்கணக்காகச் சென்று எமது அதிருப்தியைத் தெரிவித்திருந்தோம் அதில் எமது நகைகளை ஜனவரி 20ம் திகதிக்குள் மீட்டுத் தரமுடியாதபட்சத்தில் வங்கி பிராந்திய கிளை முகாமையாளர்களை ராஜினாமாச் செய்யும்படி கோரியிருந்தோம்.

"மேலும் பொங்கலுடன் அடகுவைத்த நகைகளை மீட்டுத் தருவதாக உறுதியளித்தவர்கள் பின்னர் ஏமாற்றிவிட்டார்கள்".

இதுசம்பந்தமாகத் துண்டுப் பிரசுரமொன்றும் வெளியிடப்பட்டுள்ளது. [மா]

## யாருடையது

யாழ். கன்னாத்திட்டி காளி கோயிலுக்கு அருகில் ஒரு பெண்மணியின் மூக்குக் கண்ணாடியை ஒரு அன்பர் கண்டு எடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் அலுவலக நேரத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

## சட்ட விரோத மின் இணைப்புகள் துண்டிப்பு

[குண்டுக்குளி]

யாழ். அபிவிருத்திச்சபையின் ஆனைக்கோட்டை உப அலுவலக எல்லைக்குட்பட்ட நவாலியிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கும் சில தினங்களுக்கு முன் திடீர் விஜயமொன்றை மேற்கொண்ட ஆனைக்கோட்டை உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. எஸ் மகாதேவாவும், மின் அதிபர் திரு. வி. ஆர். ஆறுமுகமும் மற்றும் ஊழியர்களும் அப்பகுதிகளில் சட்ட விரோதமாக மின்சாரம் பெற்று வந்த பலரது மின் இணைப்புகளைத் துண்டித்ததுடன் பெருந்தொகையான மின் வயர்களையும் கைப்பற்றிச் சென்றுள்ளனர்.

திடீர் விஜயத்திற்குக் காரணம் இங்கு பொருத்தப்பட்டுள்ள இரு மின் மாற்றிகளுப் அதிகரித்த சுமை காரணமாக இன்னும் சிறிது காலத்தில் 'செயலிழந்து விடும் என்றும்' இதன் காரணமாகவே தாம் இந் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் திரு. மகாதேவா கூறியுள்ளார்.

## ஹென்றி

(2ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ள முதலாவது சிங்களநபரான இவர், உமா மகேஸ்வரனின் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்துடன் தொடர்புடையவரென அரசினால் சந்தேகிக்கப்பட்டிருந்தார்.

இரும்பு வெட்டும் வாள் ஒன்றினால் சிறைக் கம்பிகளை வெட்டித் தான் தப்பிச்சென்றதாகவும், ரயில்மூலம் யாழ்ப்பாணம் போய் அங்கிருந்து படகுமூலம் தமிழகம் செல்லத் திட்டமிட்டிருந்ததாகவும் அவர் பொலிசாரிடம் கூறினாராம். [செ]

## இலங்கை...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ரத்தி தொளாயிரத்து இருபதாம் ஆண்டு மே மாதம் பதினெட்டாம் திகதி பிறந்தார். சிறுவயதிலேயே யேசுவின் நற்செய்தி பரப்பும் நற்பணியினை மேற்கொண்டார் சிறுவயதிலேயே தயை இழந்து, சகோதரர்களை இழந்து தந்தையின் அரவணைப்பில் தன்னந்தனியனாக வளரவேண்டிய சூழ்நிலை அவருக்கு ஏற்பட்டது.

மனதைத் தளரவிடாது, படிப்படியாக இலக்கிய கலாநிதியானார். பின்னர் டாக்டர் பட்டமும் பெற்றார் போலந்தில் கம்யூனிஸ்ட் ஆட்சி நடைபெற்றபோது யூதர்கள் ஆயிரக்கணக்கில் அழிக்கப்பட்ட போது பாதாள சிறையில் ஒளித்திருந்தார். அன்றுமுதல் இன்றுவரை யேசுவின் மறை பரப்பும் தொண்டனாக தன்னை மாற்றிக்கொண்டார்.

### பல நிலைகளிலும் உயர்ந்தவர்

இவர் குருவாக, ஆயராக, பேராயரா, கர்தினாலாக பல படிகளிலும் எல்லோருக்கும் முன்மாதிரியாக வாழ்ந்துஉயர்வுபெற்றார்மக்களுடன்வாழ்ந்து மக்களுக்காக தொண்டாற்ற வேண்டுமென்ற கொள்கையை உடையவர். போலிஷ், பிரெஞ்சு, இத்தாலி, ஜேர்மன், ஸ்பானிஷ், கிரேக்கம், இலத்தீன், ஆங்கிலம், ஜப்பான் ஆகிய மொழிகளை நன்கு பேசக்கூடியவர் தமிழக விஜயத்தையொட்டி தமிழ், மலையாளம், இந்தி ஆகிய மொழிகளையும் கற்று அந்த மொழிகளில் உரையாற்றவுள்ளார்.

### ஒரேயாண்டில் 3 திருத்தந்தைகள்

கிறிஸ்தவ திருச்சபையின் வரலாற்றில் மூன்று திருத்தந்தைகளைக்கண்ட ஆண்டு ஆயிரத்துத்தொளாயிரத்திஎழுபத்தெட்டாம் ஆண்டாகும். 15 ஆண்டுகளாக இருந்த அருளப்பர் 6வது சின்னப்பர் அதேயாண்டு ஆகஸ்ட் மாதம் ஆறுந்திகதி அமரரானார். இவரது மறைவை யொட்டி, வெனிஸ் நகரைச் சேர்ந்த லூசியாணி முதலாவது அருளப்பர் சின்னப்பர் தெரிவாகி முப்பத்திமூன்று நாட்களில் அமரரானார். அதன் பின்னரே அதேயாண்டு அக்டோபர் மாதம் பதினாறும் திகதி இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் தெரிவானார். அன்றுமுதல் இன்றுவரை தனது பணியினால் மக்கள் ஆதரவை பெற்றுவரும் திருத்தந்தை என்பது எல்லோரும் நன்கறிந்த விடயம்.

A/L 88 ஆரம்பம்: 01-02-86
சனி/ஞாயிறு 8-30 தொடக்கம் 1-30 வரை
A/L 87 வெப்பவியல் – திரு. மணியம்
சனி/ஞாயிறு 8-30 — 9-30 ஆரம்பம்: 1-2-86
A/L 86 வினு/விடை வகுப்புக்கள்
8-30 இரசாயனம் — திரு. சத்தீஸ்
9-30 பௌதீகம் — திரு. மணியம்
A/L 88 பிரிவு முக்கிய பாடங்களுக்கு கிழமைக்கு 4 மணித்தியாலங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.
SCIENCE ACADEMY JAFFNA. (B. M. Cக்கு முன்)
(A 166)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

# வவனியாவில் நேற்று 50 இளைஞர்கள் கைது

(வவனியா)

வவனியாவில் இராணுவத்தினரும் பொலிசாரும் கூட்டாகச் சேர்ந்து நடத்திய சோதனையில், ஐம்பதுக்கும் அதிகமான இளைஞர்கள் நேற்றுக் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்காகக் கூட்டிச்செல்லப் பட்டனர்.

ஆஸ்பத்திரிச்சந்தி, பழைய பொலிஸ் நிலையச்சந்தி ஆகிய இடங்களில் வைத்தே பல இளைஞர்கள் கைது செய்யப் பட்டனர். நேற்று மாலைவரை விடுதலை செய்யப்படவில்லை.

# அரியாலையில் ஆள் கடத்தல்: மறியல் நடக்கிறது!

(யாழ்ப்பாணம்)

அரியாலையில் உள்ள வயல் ஒன்றில் சூடுமிதிப்பில் ஈடுபட்டிருந்த ப. செல்லையா என்பவர் ஆயுகம்தாங்கிய நபர்களினல் நேற்று முன்தினம் கடத்திச்செல்லப்பட்டுள்ளார்.

இவருக்குச் சொந்தமான உழவுயந்திரங்களும் கடத்தப்பட்டுள்ளன. உழவுயந்திர சாரதி நேற்றுமாலை விடுவிக்கப்பட்டார்.

இச்சம்பவத்தின் எதிரொலியாக அரியாலைச் சந்தியிலுள்ள கண்டி வீதி, மரக்குற்றிகள் போட்டு பாதைதடைசெய்யப் பட்டுள்ளது. அரியாலை கிழக்குக்குச் செல்லும்பாதை முற்றுகதடைசெய்யப்பட்டுள்ளது.

செல்லையாவின் மனைவி மக்கள் மற்றும் உறவினர், ஆதரவாளர்கள் என்று ஐம்பதுக்கு மேற்பட்ட பெண்கள், இளம் பெண்கள் வீதியில் மறியல் செய்து வருகின்றனர். கடத்தப்பட்ட உழவுயந்திரச் சாரதி கண்கட்டப்பட்ட நிலையில் கூட்டிவரப்பட்டு விடப்பட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது

அரியாலையில் சிலநாட்களுக்கு முன்னர் நடைபெற்ற முக்கொலைகள் தொடர்பாக இச் கடத்தல் நடந்துள்ளதாக பேசப்படுகிறது. [ஐ]

# வடமராட்சி மாணவர்கள் நடத்திய ஊர்வலம்

(புலோலி]

அரசங்கத்தின் இன்றைய நிலையைக் கண்டித்தும், புதிய 1000 மீற்றர் பாதுகாப்பு வலயத்தை வாபஸ்பெறுமாறும் கோரி வடமராட்சிப் பகுதி மாணவர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நேற்று நடத்தினர்கள்.

தேசிய ஈழ மாணவர் மன்றத்தினல் ஒழுங்குசெய்யப் பட்ட இந்த ஆர்ப்பட்ட ஊர்வலத்தில பெருந்திரளான மாணவர்களும் பொதுமக்களும் கலந்துகொண்டனர். ஊர்வலம் பருத்தித்துறை பசுபதீஸ்வரர் (சிவன் கோவில்) ஆலய முன்றலில் ஆரம்பமனது. இவ்வார்ப்பாட்ட ஊர்வலம் 1ம் கட்டை, கிராமக்கோடு, புலோலி, மந்திகை. மாலுசந்தி ஊடாக நெல்லியடியையடைந்தது. ஊர்வலத்தினர் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் மகஜர் ஒன்றையும் கையளித்தனர். இறுதியில் நெல்லியடி மைதானத்தில் கூட்டமொன்றும் நடைபெற்றது. ஊர்வலத்தினர் வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகளையும் கொண்டுசென்றனர்.

# யாழ். மத்தியகல்லூரி வீதி தடைசெய்யப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ் மத்திய கல்லூரிக்கு முன்பாக உள்ள வீதி. போக்குவரத்திற்கு முற்ருகத் தடை செய்யப்பட்டுள்ளது.

யாழ். மத்திய கல்லூரி பிரதான வாசல் மூடப்பட்டு பின் பக்க வழியாக முதலாம் குறுக்கு தெருவில் புதிய வாசல் ஒன்று திறக்கப்பட்டுள்ளது.

யாழ். மேல் நீதிமன்றம். யாழ் நீதவான் நீதமன்ற வீதி வாயிற் கதவுகளும் மூடப்பட்டு நீதிமன்றங்களுக்கும், காணி பதிவுக் கந்தோருக்கும் வாகனங்கள் செல்லும் பிரதான வாசல் மட்டும் திறக்கப்பட்டுள்ளது.

றிம்மர் மண்டபத்திலுள்ள 'நர்சரி' பாலர் வகுப்பு வாசல் வேம்படி கல்லூரி பக்கமாக மாற்றப்பட்டுள்ளது. இங்கு நடைபெற்று வந்த தையல் வகுப்புகள் வேம்படி மகளிர் கல்லூரி துணைவாயிலால் செல்லும் புதியகட்டிடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. நண்பகலுக்கு பின்னர் இப்பகுதியில் சன நடமாட்டமன்றி மயான அமைதி நிலவுகிறது. (க)

# தொடர்ந்து ஊரடங்கு

(கொழும்பு)

தலவாக்கொல்லைப் பகுதியிலுள்ள ஒன்பது பொலிஸ்பிரிவுகளிலும் நேற்று இரவு 7மணிக்குப் பிரகடனப்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் இன்று காலை 6 மணிவரை அமுலில் இருக்கும். [ரா]

# இ. போ. ச. பஸ் கடத்தப்பட்டது

(முல்லைத்தீவு)

ஆயுதம்தாங்கிய இனந்தெரியாத இளைஞர்கள் முல்லைத்தீவு இ. போ. ச விற்குச் சொந்தமான மூன்று பஸ்வண்டிகளை முல்லைத்தீவில் வைத்து துப்பாக்கிமுனையில் நேற்று முன்தினம் கடத்திச் சென்றதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

# முல்லைத்தீவில் தொடரும் தாக்குதல்

(முல்லைத்தீவு)

ஆயுதப்படையினர் முல்லைத் தீவுப்பகுதியில் நேற்றுமுன் தினம் மேற்கொண்ட ஹெலிகொப்டர் தாக்குதலில் இருபதுக்கும் அதிகமான அப்பாவித்தமிழ் மக்கள் காயமடைந்துள்ளனர்.

நேற்றும் ஆயுதப்படையினருக்கும் போராளிகளுக்குமிடையே கடும் மோதல் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

பீரங்கித்தாக்குதலினல் வீடுகளும், கட்டிடங்களும் பலத்த சேதத்துக்குள்ளானதால், பொதுமக்கள் தமது இருப்பிடங்களைவிட்டு பாதுகாப்பான இடங்களைநாடி ஓடிவிட்டனர். முல்லைத்தீவுப்பகுதியில் தொடர்ந்தும் பதட்டம் நிலவுகிறது.

முல்லைத்தீவுப்பகுதியில் மின்வயர்கள் யாவும் குண்டுத்தாக்குதல்களினல் அறுந்ததன் விளைவாக இப்பகுதி இரவு நேரத்தில் இருளில் மூழ்கியுள்ளது

இராணுவத்தினர் முகாம்களைவிட்டு வெளியேருத வகையில் போராளிகள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளமையால், இராணுவ முகாமில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வும் தெரியவந்துள்ளது.

ஹெலிகொப்டர் தாக்குதலில் காயமடைந்தவர்களில் மூவர் முல்லைத்தீவு கச்சேரி ஊழியர்கள் என்பதுகுறிப்பிடத்தக்கது.

# பிரிட்டிஷ் பெண் விவகாரம்

(யாழ்ப்பாணம்)

''வன்முறை தொடர்ந்தால் கடத்தப்பட்ட பிரிட்டிஷ் பெண்மணியை விடமாட்டோம்'' என்று ஈரோஸ் அறிவித்துள்ளதாக ஈழம் செய்திப் பலகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈ. பி. ஆர். எல். எவ். வெளியிட்டுள்ள இச்செய்திப்பலகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''ஒடுக்கும் அரசை எதிர்க்கத் துணிந்த மலையக மக்கள் சிங்களப் பெருமுதலாளிகளின் கடைகள், லொறிகள், சொத்துக்கள் எரிப்பு. அரசவெறியாட்டத்தில் பலர் அகதிகளாயினர்.

கடற்படையின் துப்பாக்கிச் சூட்டுக்கு தலைமன்னரில் ஒரு மீனவர் படுகாயம்.

அரியாலையில் புளொட் போராளிகள் மூவரின் படுகொலையோடு சம்பந்தமுடைய நபர் கடத்தப்பட்டார்.''

# கொள்ளை

[அம்பாறை]

அம்பாறையில் சிங்களவரின் வீடொன்றில் புகுந்த ஆயுதம் தாங்கிய இனந்தெரியாத நான்கு இளைஞர்கள், அங்கிருந்த சைக்கிள் ஒன்றையும் 13 675 ரூபா பெறுமதியான நகைகளையும் கொள்ளையடித்துச்சென்றுள்ளனர். [ச-ய]

## இந்தியாவின்...

[1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் இல்லையென்கிறது. ஆனல் 5 கோடிமக்களும் தீவிரவாதிகளுக்கு ஆதரவளித்து வருகிருர்கள். இவ்விடயம் குறித்து இந்திய உயர் ஸ்தானிகரிடமும் முறையிட்டுள்ளேன்.''

''இலங்கைத் தீவிரவாதிகளுக்குச் சட்டவிரோதமாகத் தங்க அனுமதியளிப்பதும், பயிற்சி முகாம்களை நடத்த அனுமதி அளிப்பதும், ஆயுதக் கடத்தலுக்கு அனுமதியளித்து வருவதும் நிறுத்தப்படல் வேண்டும்.''

'அரசியல் பிரச்னைகளுக்கு அரசியல் தீர்வும், இராணுவப் பிரச்னைகளுக்கு இராணுவத் தீர்வும்தான் அவசியமாகும' என்று ஜனதிபதிபேட்டியளித்துள்ளார்.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு பெப்ரரி மாதம் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box Telegram; Eelanadu. Telephone 22389, 24126.

# மரண அறிவித்தல்

### அப்புக்குட்டி பரமசாமி

சாவகச்சேரி கோவில் குடியிருப்பைச்சேர்ந்த அப்புக்குட்டி பரமசாமி 31-01-86 வெள்ளிக்கிழமை காலமானுர். இவர் திரவியத்தின் அன்புக் கணவரும் பாலகௌரி, பாலயோகினி, பாலேந்திரன் [Midland Motors), பாலசௌந்தரி, பாலஜமுனு, மந்தாகினி, லோகேஸ்வரி, லோகேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

மரணச்சடங்குகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். ப. பாலேந்திரன்.

(A 499)

### வல்லிபுரம் கார்த்திகேசு

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த வ. கார்த்திகேசு [நிர்வாக அதிபர், மேச்சன்ற் பிறுன்ஸ் லிமிடெட்], காலமானுர். இவர் செல்லம்மாவின் [இளைப்பாறிய ஆசிரியை, இராமநாதன் கல்லூரி] அன்புக் கணவரும், காலஞ்சென்ற வல்லிபுரம் மீனுட்சி தம்பதிகளின் புதல்வரும், காலஞ்சென்ற கணபதி, அன்னமுத்து தம்பதிகளின் மருமகனும், சுகுணன் (கணக்காளர், கனடா), தயாளன் (விரிவுரையாளர், மட்டக்களப்புப் பல்கலைக் கழகம்), குணளன் (ஜெர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவாஜினி (கனடா)யின் அன்பு மாமனுரும், காலஞ்சென்ற கந்தசாமி, சரஸ்வதி, விசாலாட்சி ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்லையா [மலேசியா], திருமதி கந்தசாமி, காலஞ்சென்ற பொன்னம்பலம், காலஞ்சென்ற கணேசன் ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னுரின் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக ஞாயிற்றுக்கிழமை [2-2-1986] காலை 10 மணியளவில் அளவெட்டியிலிருந்து மல்லாகம் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். [C 485]

### சற்குருநாதர் பரமகுருநாதர்

திரு. ச. பரமகுருநாதர் (Retd Chief Clerk Magistrate's court) வியாழக்கிழமை (30-1-86) காலமானுர். இவர் காலஞ் சென்ற பாலசுப்பிரமணியம், சுப நாதன் (Retd. Agricu'tural Officer), பத்மநாதன் (Chief P. H. I., Municipality Jaffna), கணநாதன் (Bank of Ceylon Metropolitan branch) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமலர், பாரதி, சத்தியபாலதேவி ஆகியோரின் மாமனுரும். சந்திரமோகன் (ஓமான்) நிர்மலா (சம்பியா), நந்தினி (கிளிநொச்சி R. R. C.), இந்துமதி, சிவாஜினி (சம்பியா), அருந்ததி, அருச்சுனு (அபுடாபி), பிரகாஷ் (U. K.), செந்தில்குமார் (இந்தியா), சுரேஸ் (U. S. A.) ஆகியோரின் பேரனுமாவார் அன்னுரின் ஈமக்கிரியைகள் இன்று சனிக்கிழமை (1-2-86) காலை 10 மணிக்கு சோம்பயன் மணல் மயானத்தில் நடைபெறும். No. 24, பொன்னடா ஒழுங்கை, வண்ணுர் பண்ணை, யாழ்ப்பாணம். C 470

### தம்பு கந்தையா (T. K.)

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், ஆனைக்கோட்டை காலஞ்சென்ற வயிரமுத்துவின் மைத்துனருமாகிய தம்பு கந்தையா அவர்கள் காலமாகிவிட்டார். ஈமக்கிரியைகள் ஆனைக்கோட்டை வயிரமுத்தர் வளவில் இன்று சனிக்கிழமை காலை நடைபெற்று, எருக்கலம்பிட்டி மயானத்திற்கு காலை 10 மணிக்கு பூதவுடல் தகனக்கிரிகைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

தகவல்:
Dr. வ. கனகராஜா (மருமகன்),
திருமதி மகாதேவி கந்தசாமி (மருமகள்,
திரு வ பரமேஸ்வரன் (மருமகன்.
திருமதி பத்மாதேவி கதிரேசன் (மருமகள்).
வயிரமுத்தர் வளவு,
ஆனைக்கோட்டை. C 490

### சின்னத்தம்பி பாலசிங்கம்

காரைநகர் வாரிவளவைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் சின்னத்தம்பி பாலசிங்கம் காலமாகிவிட்டார். அன்னுர் வள்ளியம்மையின் அன்புக் கணவரும், இராஜேஸ்வரன் (அவுஸ்திரேலியா), பரமேஸ்வரன் (லண்டன்), விக்கினேஸ்வரன் (லண்டன்), சந்திரமலர், சந்திரமலர், சுந்தரேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும், விமலாதேவி, உமாதேவி, சிவயோகம், சச்சிதானந்தன், குமாரலிங்கம் ஆகியோரின் அன்புமாமனுரும், ரமணன், நாவிதன், மைதிலி, நிருஷன், ஜனகன், கவிதா ஆகியோரின் அன்புப்பேரனும், ஐயாத்துரை (இளைப்பாறிய ஆசிரியர்), காலஞ்சென்ற பொன்னுத்துரை, இராசம்மா, காலஞ்சென்ற செல்லம்மா, அன்னமுத்து ஆகியோரின் அனபுச் சகோதரரும் பார்வதி இளையதம்பி (உதவி வைத்தியஅதிகாரி, புங்குடுதீவு), காலஞ்சென்ற நாகேந்திரன் ஆகியோரின் மைத்துனருமாவார். ஈமக்கிரியைகள் 01-02-86 (இன்று) சனிக்கிழமை காலை 10 மணிக்கு அன்னரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக சாம்பலோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

(C 469)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org